இலங்கை மத்திய வங்கி
தகவல் திணைக்களம்

# குறிப்பேடு

21 மலர் இதழ் 8 2002 ஆகஸ்ட்



# குடித்தொகை முதுமையடைதல்

# மத்திய வங்கி முறையின் வளர்ச்சி தொடர்பானதொரு குறிப்பு

கே. எம். அபேகோன், முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திற்கு முன்னர் 'மத்திய வங்கி முறை' (The System of Central Banking) என்ற எண்ணக்கருவுக்கு தெளிவான வரைவிலக்கணம் அளிக்கப்பட்டிருக்கவில்லை. பல வருடங்களாக பல்வேறான நாடுகளிலும் இவ் எண்ணக்கரு படிப்படியாகப் பரவிவந்த போதிலும், ஓர் ஒருமைப்பாட்டையும் ஒழுங்குமுறையையும் காண முடியாதிருந்தது. பெரும்பாலான பழைமைவாய்ந்த நாடுகளில் (பழைமை வாய்ந்த நாடுகளாக இங்கு அதுவரை காலனிகளாக மாறாதிருந்ததும் அதேபோன்று முதலாளித்துவ அபிவிருத்தி வழியில் பிரவேசித்திருந்ததுமான மேற்கு ஐரோப்பிய நாடுகளே கருதப்படுகின்றன.) பிரதானமாக தனி ஒரு வங்கி அரச வங்கியாளராகவும், முகவராகவும் இருந்து நாணயங்களை வெளியிடுகின்ற ஏக உரிமையைக் கொண்டிருக்கின்றபோது அது அந்நாட்டின் மத்திய வங்கியாக மாறுகின்றது. ஆரம்ப காலகட்டத்தில் அவை தற்போதைய பொருளில் 'மத்திய வங்கி' (Central Banks) என அழைக்கப்படாதிருந்ததுடன், அவை பொதுப் புழக்கத்தில் 'நாணயங்களை வெளியிடுகின்ற வங்கி' அல்லது 'தேசிய வங்கி' (National Banks) என்றே அழைக்கப்பட்டன. இவற்றுக்கு அரசாங்கத்தினால், நாணயங்களை வெளியிடுவதற்காக சட்டவிதிகள் விதிக்கப்பட்டதோடு, இவை முக்கியமாக தங்கம் அல்லது வெள்ளி ஒதுக்கங்களை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்பட்டன. கால ஓட்டத்தைத் தொடர்ந்து இவ் வங்கிகள் ஏனைய கருமங்களை ஆரம்பித்ததோடு, அவற்றின் விரிவாக்கத்தின் காரணத்தினால் மத்திய வங்கியெனப் பெயரிடுதல் ஆரம்பமாயிற்று.

இன்றைய மத்திய வங்கி முறை நிறுவப்பட்டுள்ள பொருளில் 'சுவீடன் வங்கி' மிகப் பழைமையான வங்கியாயிருந்தபோதிலும், மத்திய வங்கிகளின் கடமைப் பொறுப்பின் பொருளைப் பொறுத்தவரை இங்கிலாந்து மத்திய வங்கியே (Bank of England) உலகின் மிகப் பழைமையான மத்திய வங்கியாயுள்ளது. ஆதலால், இங்கிலாந்து மத்திய வங்கியின் வரலாறு மற்றும் வளர்ச்சி தொடர்பாக ஆராய்தல், மத்திய வங்கி முறையின் வளர்ச்சி தொடர்பான கலந்துரையாடலில் முக்கியமானதொரு திருப்புமுனையாக இருக்கும்.

மத்திய வங்கி முறையின் விரிவாக்கம் தொடர்பாக ஆராய்தல் இக்கட்டுரையின் பிரதானமான நோக்கமாகும். இங்கு முதலில் இங்கிலாந்து மத்திய வங்கியின் விரிவாக்கம் தொடர்பாகக் கலந்துரையாடப்படும். ஏனைய மத்திய வங்கிகளின் ஆரம்பமும் அவற்றின் விரிவாக்கமும் பற்றி இக் கட்டுரையின் இரண்டாவது பகுதியின் மூலம் சுருக்கமாகக் கலந்துரையாடப்படுகின்றது. புதிய மத்திய வங்கிகளின் ஆரம்பம் தொடர்பாக சுருக்கமான குறிப்பொன்று மூன்றாவது பகுதியின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

(17ம் பக்கத்திற்கு....)

**குறிப்பேடு** ISSN 1391-7676

2002. ஆகஸ்ட்

ஒரு பிரதியின் விலை : ரூபா 10.00
வருடாந்த சந்தா : ரூபா 240.00
(தபாற் கட்டணத்துடன்)

தகவல் பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி எனப் பெயரிடப்பட்ட காசுக் கட்டளைகள்/காசோலைகள் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படுவதன் மூலம் குறிப்பேடு சஞ்சிகையை மாதாந்தம் தபாலில் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்
தகவல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590, கொழும்பு.

| கட்டுரைகள் | பக்கம் |
|---|---|
| மத்திய வங்கி முறையின் வளர்ச்சி தொடர்பானதொரு குறிப்பு | 02 |
| குடித்தொகை முதுமையடைவதற்குக் காரணமான சமூக, பொருளாதாரப் போக்குகள் | 03 |
| நாணயக் கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பான புதியதொரு வேலைத்திட்டம் | 08 |
| வறுமை ஒழிப்பும் சிறு கடன் திட்டங்களும் | 11 |
| கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை சீர்திருத்தம் | 14 |

"குறிப்பேடு" சஞ்சிகையில் இடம்பெறும் கருத்துக்கள், கட்டுரை ஆசிரியரின் கருத்துக்களேயொழிய இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாகாதிருக்கலாம்

T. 44:3

# குடித்தொகை முதுமையடைவதற்குக் காரணமான சமூக, பொருளாதாரப் போக்குகள்

அமரபால கரசிங்க ஆரச்சி - தகவல் திணைக்களம்

குடித்தொகை தொடர்பான சமூக விஞ்ஞான ஆய்வொன்றின் மூலம் ஏதேனுமொரு சமூகத்தில் குடித் தொகை சார்ந்த வடிவாக்கங்கள் பற்றியும் அக்கூட்டு நிகழ்வுகளுக்கு ஏதுவாகியுள்ள காரணிகள் பற்றியும் கலந்துரையாடப்படுதலே எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு கலந்துரையாடப்படுகின்ற விடயங்கள் கொள்கை வகுப்பவர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாயுள்ளன. குடித்தொகை வளர்ச்சி வேகம் சார்ந்த பிரச்சினைகள், குடிப்பெயர்வு முறைகள், குடித்தொகையில் பால் விகிதம் (ஆண் - பெண்) தொழில் நிலை மற்றும் தொழிலின்மை அத்துடன் பாதி தொழில் நிலை சார்ந்த பிரச்சினைகளைப் போன்றே குடித்தொகைக் கூம்பில் முதியோர் மட்டம் விரிவடைதல் சார்ந்த சிக்கலான பிரச்சினைகளையும் இனங்காணுதல் தொடர்பாகக் கவனம் செலுத்த முடியுமாயுள்ளது.

ஒரு குறிப்பிட்ட பூகோளப் பிரதேசத்தில் குறிப்பிட்டதொரு காலகட்டத்தினுள் மக்கள் தொகை ஒன்றுதிரண்டிருக்கின்ற பாங்குக்கே குடித்தொகையென வரைவிலக்கணம் கூறுகிறோம். இங்கு பால்நிலை, வயதுக் கட்டமைப்பு, இனவாரியான உள்ளமைப்பு, வளர்ச்சி வேகம், பிறப்பு மற்றும் இறப்பு வீதம், இனப்பெருக்க ஆற்றல் (Fertility) மற்றும் குடிப்பெயர்வு முறை போன்றவை தொடர்பான ஆய்வுக்குத் தேவையான புள்ளிவிபரத் தரவுகள் தொகை மதிப்பீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. 1981ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 17 ஆம் திகதி நடத்தப்பட்ட தொகை மதிப்பீட்டின் பின்னர் இறுதியாக ஒழுங்கானதொரு தொகை மதிப்பீடு 2001 ஆம் ஆண்டிலேயே நடத்தப்பட்டது.

மோல்தஸ்ஸின் தத்துவம் எனப்படும் மத்தூஸிய கோட்பாட்டின்படி குடித்தொகை பெருக்கலளவையில் (2, 4, 6, 8 என்ற ரீதியாக) வளர்ச்சியடையும்போது வளக் கட்டமைப்பு சமாந்தர அளவில் (1, 2, 3, 4 என்ற ரீதியாக) வளர்ச்சியடைவதால் குடித்தொகை பிரச்சினையாக மாறுகின்றது. ஆயினும் மாக்சிஸ கண்ணோட்டத்திற்கு ஏற்ப ஒவ்வொரு நபரும் வளக் கட்டமைப்புக்கு உரித்தாகின்றனர். ஆதலால், மனித வளத்தை 'மனித மூலதனம்' என மாக்ஸ் குறிப்பிடுகிறார். குடித்தொகை ஒரு நாட்டிற்குரிய பெறுமதி மிக்க வளங்களில் ஒன்றாகுமெனக் குறிப்பிட முடியுமாயுள்ளது இதனாலாகும். வளங்கள் இருப்பினும் அவ்வளங்கள் பகிர்ந்தளிக்கப் படுவதில் முரண்பாடுகள் நிலவுகின்றபோது குடித்தொகையைப் பிரச்சினையொன்றாகக் காண்கின்றோம். அச்சந்தர்ப்பத்தில் குடித் தொகையைக் கட்டுப்படுத்துவதை விடுத்து, அதனைப் போஷிக்கக் கூடிய மட்டத்திற்கு வளக் கட்டமைப்பை விரிவாக்குதலே செய்யவேண்டியுள்ளது. அவ்வாறாயினும், இயற்கை நிலைமைகளினுள் சீனா போன்ற நாடுகளிலும் தற்போது கடுமையான குடித்தொகைக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் பேணி வரப்படுகின்றதென்பதை அறிகிறோம். அதேபோன்று, முதலாளித்துவப் பொருளாதார முறைகளைக் கடைப்பிடிக்கின்ற மேற்குத் தேயநாடுகளை நோக்குகின்றபோது அவர்கள் மத்தூஸிய கோட்பாட்டைத் தகர்த்தெறிந்துள்ளார்களென்பதைக் காண்கின்றோம். இவர்களுடைய உணவுற்பத்தி குடித்தொகை வளர்ச்சி வேகத்தை விட அதிகரித்துள்ள தனாலேயே அவ்வாறு நடைபெறுகின்றது. தற்போது உலகிலுள்ள வளங்கள் சமமானதாகப் பகிர்ந்தளிக்கப்படுமெனில் எந்தவொரு நாட்டிலும் மேலதிகக் குடித்தொகையைக் காண முடியாதிருக்கும். ஆயினும், அவ்வாறானதொரு வேலைத் திட்டம் இற்றைவரை இல்லாததனால், என்றாவது அவ்வாறானதொன்று உருவாகும் வரை உலக குடித்தொகையில் 80% வீதமானவர்கள் வாழுகின்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு உலக வருமானத்தில் 20% வீதமே உரித்தாகியிருக்கும். ஹர்ஷ்மன் (Hershman) போன்ற அறிஞர்கள் இந் நிலைமையைத் தமது ஆராய்ச்சி அறிக்கைகளில் 'குடித்தொகையும் வளங்கள் சமனற்ற விதத்தில் துருவமயப் படுத்தலும்' என்ற அடை மொழி வாசகத்தின் மூலமே குறிப்பிடுகின்றனர்.

தற்போதைய உலக சனத் தொகை இம் மிலேனியம் ஆரம்பிக்கின்றபோது 6.0 பில்லியனாகியது. உலக குடித்தொகை வளர்ச்சி ஏறத்தாழ வருடத்திற்கு 1.5 வீதமெனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் முதன்முதல் ஒழுங்கான தொரு தொகை மதிப்பீடு 1871 ஆம் ஆண்டிலேயே நடத்தப்பட்டது. 1871 ஆம் ஆண்டிலிருந்து 1981 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தினுள் இலங்கையின் குடித்தொகை நூற்றுக்கு 517 வீதத்தால், அதாவது ஏறத்தாழ ஆறு மடங்கு அதிகரித்துள்ளதெனக் காண்கின்றோம். 1871 ஆம் ஆண்டின் மட்டத்திலிருந்து குடித்தொகை இரண்டு மடங்காவதற்கு 35 வருட காலமே எடுத்தது. (தொகை மதிப்பீட்டுப் புள்ளிவிபரவியல் திணைக் களத்தின் தரவுகளிலிருந்து எடுக்கப்பட்டது.) 1940 ஆம் தசாப்தத்தின் இறுதிப் பகுதியிலிருந்து படிப்படியாகக் குடித் தொகையில் துரித வளர்ச்சியொன்றைக் காண்கிறோம். இவ் வளர்ச்சிக்கான முக்கிய காரணம். மருத்துவத் துறையிலேற்பட்ட ஒருசில வளர்ச்சிகரமான பண்புகளாகும். இதன் காரணமாக இறப்பு வீதம் குறைவடைந்து பிறப்பு வீதம் அதிகரித்தது. கிராமியச் சுகாதார சேவை மற்றும் கிராமிய மருத்துவமனை முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டமையும் இதற்கு ஏதுவாயிருந்திருக்கலாம். பிறப் பின்போது நிகழ்கின்ற சிசு மரண வீதம் குறைவடைதல், இனப்பெருக்க ஆற்றல் உயர்மட்டத்தைக் கொண்டுள்ளமை, சாதாரண இறப்பு வீதம் குறைவடைந்தமை காரணமாக குடித்தொகை வளர்ச்சியடைதல் ஒரு குடித்தொகைப் பிரச்சினையாகப் பிற்பட்ட காலங்களிலேயே உணரப்பட்டது. குறிப்பாக, 1953 - 1965 ஆம் ஆண்டு காலகட்டத்தினுள் மொத்தப் பிறப்பு வீதம் நூற்றுக்குப் 12 வீதத்தால் வீழ்ச்சியடைவதோடு. இது 1963 - 1973 க்கு இடைப்பட்ட காலத்தில் நூற்றுக்கு 18 வரை வீழ்ச்சியடைகிறது.

இக்குடித்தொகை வளர்ச்சியின் துரிதமான வீழ்ச்சி தற்செயலானதல்ல. அதிகூடிய குடித்தொகை வளர்ச்சியின் காரணமாக நாட்டின் அபிவிருத்தி மந்தகதிய டையுமென்று 1950 ஆம் தசாப்தத்தின் முற்பகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்ட மிடல்களிலும் குறிப்பிடப்பட்டன. இலங்கையின் குடித்தொகைத் துறையின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக முதலில் அரச சார்பற்ற நிறுவனமொன்றான 'குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்கம்' 1953 ஆம் ஆண்டில் செயற்படத் தொடங்கியது. இதற்கிடையே குடித்தொகைக் கட்டுப்பாடு தொடர்பாக அரசாங்கமும் கவனம் செலுத்தத் தொடங்கியது. முதலில் 1958 இல் இலங்கை அரசாங்கம் 'சுவீடன் அரசாங்கத் துடன்' சமூகக் குடும்பத்திட்ட ஊக்குவிப்பு முன்னோடிக் கருத்திட்டமொன்றுக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. இக்



4927
6407

கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் வெற்றியளித்ததோடு, 1965 இல் அரசாங்க அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு நடைமுறைத் திட்டமொன்று அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. 1965 இன் பின்னரே அரசாங்கம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தேசிய கொள்கை மட்டத்திற்குக் கொண்டு வந்தது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டப் பணியகமொன்று 1968 இல் சுகாதார அமைச்சினுள் நிறுவப்பட்டது. குடித்தொகைக் கட்டுப்பாடு தொடர்பான அரச கொள்கை இத்துடன் நின்றுவிடவில்லை. 1973 இல் ஐக்கிய நாடுகள் குடித்தொகை நிதியம் இலங்கையுடன் கருத்திட்ட உடன்படிக்கையொன்றுக்குக் கைச்சாத்திட்டது. அதேபோன்று சமூக அபிவிருத்திச் சேவைகள், இலங்கைத் தொண்டர் கருத்தடை அறுவைச் சங்கம் மற்றும் குடித்தொகைச் சேவைச் சங்கம் ஆகிய அரச சார்பற்ற அமைப்புக்கள் இலங்கையின் குடித்தொகை மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதான விதத்தில் தலையிட்டன. இவற்றின் சேவைகளையும் அரசாங்கம் வரவேற்றது. 1979 இல் திட்ட அமுலாக்கல் அமைச்சு குடித்தொகை நடவடிக்கைகளை நிருவகிக்கின்ற இணைப்பாக்கல் நிறுவனமொன்றாகத் தலையிட்டது. 1975 இல் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட முறைகளைப் பயன்படுத்துகின்ற திருமணமான பெண்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 32 வீதமாயிருந்ததோடு, படிப்படியாக இது 1982 இல் நூற்றுக்கு 55 வீதமாகவும், 1987 இல் நூற்றுக்கு 62 வீதம் வரையிலும் வளர்ச்சியடைந்தது. 1991 ஆம் ஆண்டாகும்போது, கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருமணமான பெண்களில் 1.7 மில்லியன் பெண்கள் ஏதேனுமொரு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட முறையொன்றைப் பயன்படுத்தியுள்ளனரென்பதோடு, 2001 ஆம் ஆண்டாகும்போது, ஏதேனுமொரு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பயன்படுத்துகின்ற திருமணமான பெண்கள் 2.1 மில்லியன் உள்ளனரென அனுமானிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வுகளுக்கமைய சார்க் வலயத்திலுள்ள ஏனைய நாடுகளிடையே ஆகக் குறைந்த பிறப்பு வீதம் இலங்கையிலேயே அறிக்கையிடப்பட்டுள்ளது. அதாவது, 1965 இல் 4.9 வீதமாயிருந்த உயிருள்ள பிறப்பு வீதம் 1990 ஆகும்போது 2.5 வீதம் வரை வீழ்ச்சியடைந்தது. முழு வலயத்திலும் இம்மட்டத்திலுள்ள மாதிரி இனப்பெருக்க ஆற்றலைக் கொண்ட ஒரேயொரு நாடு இலங்கையாயிருப்பது விஷேட பண்பாகும்.

பிறப்பின்போது வாழ்நாள் எதிர்பார்ப்பைக் கணிப்பிடுகின்றபோது, சார்க் வலயத்தில் சராசரி வாழ்நாள் எதிர்பார்ப்பின் பெறுமானம் 57 வருடங்களாவதோடு, இலங்கையில் பிறப்பின் போது சராசரி வாழ்நாள் எதிர்பார்ப்பு 73.5 வருடங்களாயிருப்பதும் மேலுமொரு விசேட பண்பாகும்.

கடந்த பல தசாப்தங்களினுள் குடித்தொகைக் கட்டமைப்பின் ஒழுங்கு முறையிலான மாற்றங்களைக் கவனிக்கின்றபோது, பிரதானமாக இனங்காணக்கூடிய இரண்டு பண்புகளைத் தெளிவாகக் காண்கிறோம். அவையாவன,

1. ஆண்/பெண் விகிதாசாரத்தில் பெண்களுடைய குடித்தொகை விகிதாசாரம் அதிகரித்தலும் அத்துடன்,
2. குடித்தொகை முதுமையடைதலும் என்பனவாகும்.

இதில் இரண்டாவது விடயமான குடித்தொகை முதுமையடைதல் தொடர்பான கொள்கை திட்டமிடலில் உடனடி மற்றும் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. சமூகவியல் கண்ணோட்டத்தில் குடித்தொகை முதுமையடைதல் தொடர்பாகக் கவனம் செலுத்துதல் இக் கட்டுரையின் விடய ரீதியான வரையறையாகும்.

## குடித்தொகையின் வளர்ச்சியும் அண்மிய காலப் போக்குகளும்

தொகை மதிப்பீடுகளை நடத்துவதில் இலங்கைக்கு நீண்டகால வரலாறொன்றும் அனுபவமும் உள்ளது. முதன்முதலில் விஞ்ஞான ரீதியானதும் நுட்பமானதுமான தொகை மதிப்பீடொன்று இலங்கையில் 1871 ஆம் ஆண்டிலேயே நடாத்தப்பட்டுள்ளது. அன்றிலிருந்து ஒவ்வொரு பத்து வருடங்களுக்கும் ஒரு முறை குடித் தொகை தொடர்பான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் பகுத்தாராய்தல் நடைபெற்றது. இதன்படி மொத்தக் குடித்தொகை, அது பரவியுள்ள விதம், ஆண்/பெண் விகிதாசாரம், வயதுத் தொகுதிகளுக்கு ஏற்ப குடித்தொகைக் கூம்பு அமையப் பெற்றுள்ள விதம், குடித்தொகை வளர்ச்சி வேகம் மற்றும் வளர்ச்சி வீதம் போன்றவை சமூக ரீதியிலான பல்வேறு பெறுமானங்கள் தொடர்பிலும் விஷேட கவனம் செலுத்தப்படக்கூடிய துறைகளாகும். இதன்படி குடித்தொகைத் தகவல்கள் போன்றவற்றில் காணக்கிடைக்கின்ற சட்டரீதியிலான பண்புகளைப் புரிந்து கொண்டு கொள்கை வகுப்பவர்ளுக்கு, நிருவாகிகளுக்கு மற்றும் சமூக ஆய்வாளர்களுக்கு அதனுடன் தொடர்புடைய எதிர்காலத் திட்டங்களை அல்லது ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியுமாயிருக்கும்.

இருபது வருடங்களுக்குப் பின்னர் குடிசன, வீட்டுவசதித் தொகை மதிப்பீடு 2001 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நடாத்தப்பட்டமை நாட்டின் குடித்தொகைப் பரம்பல் தொடர்பான பிரதானமான பண்புகளைப் புரிந்து கொள்வதற்குப் பேருதவியாயிருந்தது. இதற்கு முன்னர் ஒழுங்கானதொரு தொகை மதிப்பீடு 1981 ஆம் ஆண்டிலேயே நடத்தப்பட்டது. அப்போதிருந்த தொகை மதிப்புத் தகவல்களின்படி, இலங்கையின் குடித்தொகைப் பரம்பலைப் பின்வருமாறு அட்டவணையிட்டுக் காட்டலாம்.

1வது புள்ளிவிபர அட்டவணை

| ஆண்டு | மொத்த சனத் தொகை | வளர்ச்சி வீதம் |
|---|---|---|
| 1871 மார்ச் 27 | 2,400,380 | - |
| 1881 பெப்ருவரி 17 | 2,759,738 | 1.42 |
| 1891 பெப்ருவரி 26 | 3,007,789 | 0.86 |
| 1901 மார்ச் 01 | 3,565,954 | 1.72 |
| 1911 மார்ச் 01 | 4,106,350 | 1.42 |
| 1921 மார்ச் 18 | 4,497,854 | 0.91 |
| 1931 பெப்ருவரி 26 | 5,306,863 | 1.68 |
| 1946 மார்ச் 19 | 6,657,339 | 1.52 |
| 1953 மார்ச் 20 | 8,097,845 | 2.84 |
| 1963 யூலை 08 | 10,582,064 | 2.65 |
| 1971 ஒக்ரோபர் 09 | 12,689,897 | 2.20 |
| 1981 மார்ச் 17 | 14,846,750 | 1.67 |
| முறைசாரா விதத்தில்/அனுமானித்தல் மூலம் தயாரிக்கப்பட்ட குடித்தொகைத் தகவல்கள். | | |
| 1985 | 15,842,000 | 1.5 |
| 1990 | 16,983,000 | 1.0 |
| 1995 | 18,112,000 | 1.4 |
| 1996 | 18,315,000 | 1.1 |
| 1997 | 18,552,000 | 1.3 |

மூலம் : தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

1981 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட இறுதித் தொகை மதிப்பீட்டிலிருந்து 20வருடங்களுக்குப் பின்னர் நடத்தப்பட்ட 2001 ஆம் ஆண்டின் தொகை மதிப்பீட்டின் மூலம் நாட்டின் குடித்தொகைப் பரம்பல் தொடர்பாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பல தகவல்கள் கொள்கை வகுப்பவர்களுக்கும் அதே போன்று சமூகவியலாளர்களுக்கும் வழங்கப்படுகின்றது. இதன்படி 2001 தொகை மதிப்பீட்டின்மூலம் மதிப்பிடப்பட்ட மொத்தக் குடித்தொகை 18.7 மில்லியனாயிருந்ததோடு, 1981 இல் இருந்து 2001 வரையிலான



காலகட்டத்தினுள் சராசரி ஆண்டுக் குடித்தொகை வளர்ச்சி வேகம் நூற்றுக்கு 1.2 வீதமாகும். குறிப்பிட்ட 20 வருடங்களினுள் இலங்கையில் ஏற்பட்ட சமூக, பொருளாதார நிலையற்ற தன்மை காரணமாக பிரதேசக் குடித்தொகைப் பரம்பலில் மாற்றங்கள் ஏற்பட்டதோடு, அதனூடாக ஒருசில மாவட்டங்களில் குடித்தொகை வளர்ச்சி வேகம் மொத்தக் குடித்தொகை வளர்ச்சி வேகத்தைவிட அதிகரித்ததொரு மட்டத்தைக் கொண்டிருந்தது. இதற்கு ஏனைய காரணிகளோடு குடிப் பெயர்வு முறைகளும் பெரும்பாலும் ஏதுவாயிருந்துள்ளதென்பதைக் காண்கிறோம். இவ்வனைத்து விடயங்களுக்கும் மேலாக இலங்கையின் குடித்தொகை முதுமையடைகின்ற இயல்பு விரிவடைதலும், பால் விகிதத்தில் (குடித்தொகையில் 100 பெண்களுக்கு ஆண்களுடைய எண்ணிக்கை) மாற்றமும் அதாவது, குறைவடைதலும் 2001 தொகை மதிப்பீட்டின் மூலம் தெளிவாகக் காணக் கூடியதாயுள்ள விடயங்களாகும்.

இக்கட்டுரையின் மூலம் பிரதானமாகக் கவனம் செலுத்தப்படுகின்றதான குடித்தொகை முதுமையடைதல் மற்றும் அது சார்ந்த சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை இனங்காண்பதற்கு முதல் அதற்குக் காரணமாயமைந்த விடயங்கள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

குடித்தொகையை விஞ்ஞான ரீதியாக ஆராய்கின்றபோது குடிப்பரம்பலியலில் வருகின்ற கோட்பாடொன்று எமக்குப் பயனுள்ளதாக அமைகின்றது. அதனை

2 வது புள்ளிவிபர அட்டவணை

**1981 மற்றும் 2001 குடிசன மற்றும் வீட்டு வசதித் தொகை மதிப்பீட்டிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சுட்டெண்கள்**

| | 1981 | 2001 |
|---|---|---|
| 1. குடித்தொகை (மில்லியன்) | | |
| 18 மாவட்டங்களில் (அ) | 13.1 | 16.8 |
| 7 மாவட்டங்களில் (ஆ) | 1.7 | 1.9 |
| அனைத்துமாவட்டங்களிலும் | 14.8 | 18.7 |
| 2. சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் (%) | 1.6 | 1.2 |
| 3. பால் விகிதாசாரம் (100 பெண்களுக்கு ஆண்கள்) | 103.9 | 97.9 |
| 4. வயதுத் தொகுதிகளுக்கு ஏற்ப பரம்பல் வீதம் (%) | | |
| 18 வயதுக்குக் குறைந்தோர் | 41.6 | 32.9 |
| 18 வயதும் அதற்கு மேலும் | 58.4 | 67.1 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி - ஆண்டறிக்கை 2001

(அ) 1981 மற்றும் 2001 தொகை மதிப்பீடுகளின்போது முழுமையாக ஆராயப்பட்டது.

(ஆ) 1981 தொகை மதிப்பீட்டின்போது முழுமையாக ஆராயப்பட்டதோடு, 2001 ஆண்டுத் தொகை மதிப்பீட்டின்போது, பகுதிவாரியாகக் கணிப்பீடு செய்யப்பட்டது.

குடித்தொகையியல் பெயர்வு நிலைக் கோட்பாடென அழைக்கின்றோம். இக் கோட்பாட்டின்படி உலகின் எந்தவொரு நாட்டினதும் குடித்தொகைப் பரம்பல் நான்கு நிலைகளாகக் காட்டப்படுவதோடு, எந்தவொரு நாட்டினதும் குடித்தொகை இந்நான்கு நிலைகளிலும் ஒன்றுக்கு உரித்தாகின்றது.

1. உயர் உறுதி நிலை
2. ஆரம்ப விரிவடையும் நிலை
3. விரிவடைதலுக்குப் பிற்பட்ட நிலை
4. தாழ் உறுதிநிலை

## 1. உயர் உறுதிநிலை

இந்நிலைமையின்போது சமூகத்தினுள் பிறப்பு மற்றும் இறப்பு வீதங்கள் உயர்ந்த மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாயுள்ளது. அதாவது, பிறப்புத் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது இறப்புத் தொகையைத் தவிர்ப்பதற்குரிய ஆற்றலை இவ்வாறான சமூகங்களில் காணமுடியாது. இவ் வடிவம் எளிமையான கோத்திர மட்டத்திலான சமூகங்களிலேயே நிலவுகிறது. உதாரணமாக, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் இந் நிலைமையைக் காணக்கூடியதாயுள்ளதோடு, இலங்கையில் தற்போது அடித்தள வசதிகள் மிகவும் குறைந்த நிலையிலுள்ள பகுதிகளில் கூட இப் பண்புகளைக் காணமுடியாதுள்ளது.

## 2. ஆரம்ப விரிவடையும் நிலை

இங்கு இறப்பு வீதம் துரிதமாக வீழ்ச்சியடைவதோடு, பிறப்பு வீதம் அதற்கு மேல்மட்டத்தில் செல்கிறது. இதன்படி குடித்தொகை கூடிச்செல்கின்ற வேகத்தில் வளர்ச்சியடைகின்றது. குறிப்பாக, இவ்வடிவங்களை மூன்றாம் உலக நாடுகள் எனப்படும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிலேயே காணலாம். இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளை வலய ரீதியில் உதாரணத்திற்கு எடுக்கலாமென்பதோடு, இலங்கையும் இந்நிலையிலேயே இருந்திருக்க வேண்டும் (ஆயினும், அது அவ்வாறால்ல).

## 3. விரிவடைதலுக்குப் பிற்பட்ட நிலை

இங்கு பிறப்பு வீதம் துரிதமாக வீழ்ச்சியடைவதோடு, இறப்பு வீதமும் மேலும் வீழ்ச்சியடைந்து குடித்தொகையின் விரிவடைதல் குறைந்ததொரு வேகத்தை நோக்கி இட்டுச் செல்லப்படுகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளே இவ்வடிவங்களைக் கொண்டுள்ளன. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் அதேபோன்று பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளையும் இதற்கு உதாரணமாகக் காட்டலாமென்பதோடு, இலங்கை கூட இந் நிலையிலேயே இருக்கின்றதென்பதைத் தொகை மதிப்பீடுகளை ஆராய்கின்றபோது காணலாம்.

## 4. தாழ் உறுதி நிலை

இந்நிலையின்போது பிறப்பு மற்றும் இறப்பு வீதங்கள் சமநிலைப் பெறுமானத்தை நோக்கி வடிவமையும் நிலையில் இருக்கும். அதேபோன்று இவ்விரு துறைகளும் மிகக் கீழ் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கும். அதிகூடிய அபிவிருத்தியடைந்த நாடுகளிலேயே இவ் வடிவத்தைக் காணலாம்.

இந்தக் குடித்தொகையியல் பெயர்வு நிலைக் கோட்பாட்டின்படி இலங்கை இரண்டாவது பெயர்வு நிலையிலேயே இருந்திருக்க வேண்டும். அதாவது, ஆரம்ப விரிவடையும் நிலையிலாகும். ஆயினும், தற்போது இலங்கை மூன்றாவது கட்டத்தில் அதாவது, விரிவடைதலுக்குப் பிற்பட்ட நிலைமையிலேயே உள்ளது. இலங்கை பொருளாதார அபிவிருத்தியைப் பொறுத்தவரை ஆகக் கீழ் மட்டத்தில் இருந்தபோதிலும், குடித்தொகை வளர்ச்சி வேகத்தைப் பொறுத்தவரை அபிவிருத்தியடைந்த நாடொன்றின் நிலையை எவ்வாறு எட்டியது என்பதை ஆராய்வதன் மூலம், குடித்தொகை முதுமையடைவதற்குக் காரணமான நிகழ்வுகளைக் கண்டறியக் கூடியதாயிருக்கும். அதற்கு முன்னர் அபிவிருத்தியடைந்த நாடுகள் குடித்தொகையில் பெயர்வு நிலைக் கோட்பாட்டின் மூன்றாவது நிலையை எவ்வாறு அடைந்தது என்பதைப் பற்றி ஆராய்தல் இங்கு முக்கியமாகின்றது.

அபிவிருத்தியடைந்த நாடுகள் குடித்தொகை வளர்ச்சி வீதத்தைத் தாழ்ந்த மட்டத்தில் பேணி வருகின்றமை அபிவிருத்தியின் விளைவாகவேயென்பதை காரணிகளை ஆராய்கின்றபோது அறிகின்றோம். ஆயினும், இலங்கை மூன்றாவது நிலையை எட்டியிருப்பினும், இது மேலைத்தேய அபிவிருத்தயடைந்த நாடுகள் சென்ற வழியைவிட வித்தியாசமானதொரு வழியைப் பின்பற்றியதன் மூலமே என்பது தெளிவாகின்றது. இது ஒரே தடவையில் நடைபெற்றதல்ல. 1950 ஆம் தசாப்தத்தில் ஆரம்பிக்கப்பட்ட அதிகூடிய சனத்தொகை, அபிவிருத்தியை மந்தகதியடையச் செய்யும் என்பதில் அரச துறையின் கவனம் செலுத்தப்பட்டமையும், அதன் பின்னர் இலங்கை அரசாங்கம் சுவீடன் அரசாங்கத்துடன் சமூகக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமிடலை ஊக்குவித்தமையும், படிப்படியாக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமிடல் முறைகளை அரச அனுசரணையுடன் விரிவாக்கியமையும், மத்தியதர வகுப்பினரின் உறுதியற்ற சிந்தனை நிலையும் இதற்கான காரணிகளாயமைந்தன. இலங்கையின் நிலை இவ்வாறிருந்தபோதிலும், அபிவிருத்தியடைந்த நாடுகள் குடித்தொகையியல் பெயர்வுநிலைக் கோட்பாட்டின் மூன்றாம் நிலைக்கு உள்ளாகியமைக்குக் காரணமாயமைந்த விடயங்கள் தொடர்பில் வைன்ஸ்ரைன் என்ற சமூகவியலாளர் கவனம் செலுத்துகின்றார்.

1. ஐரோப்பாவின் பிரபுத்துவ கமத்தொழில் உற்பத்தி முறை, கைத்தொழில் உற்பத்தி முறைக்கு மாற்றமுறுதல்.
2. கிராமியப் பிரதேசங்களிலிருந்து நகரங்களை நோக்கி நடைபெற்ற உழைப்போரின் இடம்பெயர்வு (உழைப்பின் அசைவு).
3. உறவுமுறைத் தொடர்புகளின் வீச்சு எல்லை சுருங்கியமையும் நகரத்தில் தனிக் குடும்பங்கள் வடிவமைதலும்.
4. பெண்களுடைய அலுவல்கள் தொடர்பாகவும் சமூக நிலை தொடர்பாகவும் ஏற்பட்ட மாற்றங்கள்.
5. சுகாதார சேவை விரிவடைந்ததன் காரணமாக, தாய் மரணங்கள் மற்றும் சிசு மரணங்கள் தொடர்பாக இருந்த இடர்கள் வீழ்ச்சியுற்றமை (இதன் காரணமாக குழந்தைகளுடைய உயிர் பாதுகாக்கப் பட்டதோடு, சிறு குடும்பங்கள் நிலைபெறுவதற்கும் ஏதுவாயமைந்தது.).
6. மொத்தமாக கைத்தொழில் சமூகத்தில் ஆண், பெண் இரு பாலாரும் வீட்டிற்கு வெளியே சேவை நிலையங்களில் கழிக்கின்ற காலம் அதிகரித்தமையும் அதன் பின்னர் கற்றுலாக்கள், பொழுது போக்குக் கழகங்களில் நேரத்தைக் கழித்தல், கலந்துரையாடல்கள் போன்ற பொழுதுபோக்குகளில் கூடுதலாக ஈடுபடுதலும்.
7. பொருளாதாரக் கட்டமைப்பில் நடைபெறுகின்ற அபிவிருத்தி தானாகவே சமூகக் கட்டமைப்பின் பிரிவொன்றான குடும்ப அலகுகளில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துதல்.

ஐரோப்பிய சமூகத்தின் பொருளாதாரச் செயற்பாட்டினுள் நடைபெற்ற வளர்ச்சிகரமான நிலைமைகளின் காரணமாக, சமூக வாழ்க்கையிலும் வளர்ச்சிகரமான இயல்புகள் ஏற்பட்டு குடித்தொகையில் பெயர்வு நிலைக் கோட்பாட்டின் மூன்றாவது நிலைக்கு உரிமை கோருவதற்கு முடியுமாயிற்று. ஆயினும், இலங்கை பொருளாதாரத்தின் வளர்ச்சிகரமான பண்புகளாலன்றி, வெளிவாரியான ஊக்குவிப்புச் செயற்பாடுகளில் காணக்கூடியதாயிருந்த கவரக்கூடிய பண்புகளின் காரணத்தினாலேயே இம்மட்டத்தை அடைந்தது.

### குறை அபிவிருத்தியடைந்த இலங்கையும் குடித்தொகையின் விவாகத்துக்குப் பிற்பட்ட நிலையும்

மேலைத்தேய அபிவிருத்தியடைந்த நாடுகளில் குடித்தொகையின் முதுமையடையும் செயற்பாடு, அந்நாடுகளில் உயர் பொருளாதார விருத்தியொன்றைக் காணக்கூடிய காலகட்டத்திலேயே நடைபெற்றது. ஆயினும் குறிப்பாக, இலங்கையின் குடித்தொகை முதுமையடையும் செயற்பாடு, தாழ் பொருளாதார வளர்ச்சியொன்று நிலவுகின்ற மட்டத்திலேயே நடைபெற்றுள்ளது. இலங்கை இன்னமுமே நூற்றுக்கு 80 வீதம் கிராமியத் துறைக் குடித்தொகையொன்றைக் கொண்டதும், பெரும் பகுதியினர் வாழ்வுத் தேவை மட்டத்தைவிடக் கீழ் நிலையிலுள்ளது மானதொரு நாடாகும். ஆயினும், காலனித்துவக் காலகட்டத்திலிருந்து சமூகத்தின் மேற் கட்டமைப்பின் ஒரு சில பிரிவுகள் (கல்வி, சுகாதாரம், வங்கித்துறை, போக்குவரத்து) அபிவிருத்தியடைந்த நாடொன்றின் மட்டத்திற்கு வடிவமைந்துள்ளன. கல்வி இதில் முதலிடம் வகிக்கின்றது. இலங்கையின் குடித்தொகை சார்பான இவ் வடிவமைப்பு தொடர்பாக ஆய்வொன்றை நடத்தியுள்ள பேராசிரியர் திலகரத்ன அவர்களினதும் விரிவுரையாளரான நியுடன் குணசிங்க அவர்களினதும் ஆராய்ச்சி அறிக்கைகளின்படி, இலங்கை குடித்தொகை வளர்ச்சி வேகத்தைப் பொறுத்தவரை, தென் ஆசிய நாடுகளுக்கிடையே குறைந்த வளர்ச்சி வேகத்தை அறிக்கையிட்டுள்ளமை தொடர்பாக இரண்டு பிரதானமான சமூகக் காரணிகள் மூலம் பகுத்தாராயலாம்.

1. இலங்கையில் விவாகமாகின்ற வயதுப் பிரிவினரின் வயது மட்டங்கள் உயர்ந்து செல்லல் (28 - 30 க்கு இடையே).
2. மண வாழ்க்கையினுள் பிள்ளைகள் தொடர்பான மனப்பாங்குகளும் தேவைகளும் மாற்றமடைந்து வருதல்.

இவ்விரு விடயங்களுக்கும் ஏற்புடைய வகையில் இலங்கையில் மொத்த இனப்பெருக்க ஆற்றல் வீழ்ச்சியடைதலே நடைபெற்றுள்ளது. 1940 ஆம் ஆண்டுகளில் நிலவிய 8.5 வீத இனப்பெருக்க ஆற்றல் தற்போது 1.2 வீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் மேற்கூறிய பிரதானமான இரண்டு காரணிகளுக்கும் ஏற்ப இனப்பெருக்க ஆற்றலை பின்னடைவுக்கு இட்டுச் சென்றது எவ்வாறென்பதைப் பகுத்தாராய வேண்டியுள்ளது. குடித்தொகை முதுமையடைதலில் இக் காரணிகள் நேரடியாக ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் சொற்பமானவையல்ல என்பதே இதற்கான காரணமாகும்.

### இலங்கையில் விவாகமாகும் வயதெல்லை உயர்ந்து செல்வதற்கான காரணங்கள்

(அ) ஆண், பெண் இரு பாலாருக்கும் கல்விக்காகக் கூடுதலான காலத்தைச் செலவிட வேண்டி வந்துள்ளமை (ஆரம்பக் கல்வியின் மூலம் திருப்திகரமான தொழில் வாய்ப்புக்கள் கிடைக்காததன் காரணத்தினால் உயர் கல்வியை நாடிச் செல்லல். பல்கலைக் கழகங்களில் உள்ளகப் பிரச்சினைகளின் காரணமாக, கல்வி ஆண்டு நீண்டு செல்லல். அனுபவச் சான்றிதழும் கட்டாயத் தேவையொன்றாக மாறியுள்ளமையும், தொழிலை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியுள்ளமையும்.).

(ஆ) மத்திய வகுப்புச் சமூக மட்டம் விரிவடைதல் (பிள்ளைகளுடைய கல்வி தொடர்பாகத் தீவிர உற்சாகமும் அர்ப்பணிப்பும் காட்டப்படுதல், வெளிநாட்டுக் கல்வி மற்றும் வெளிநாட்டுத் தொழில்களை நாடிச் செல்லல்.).

(இ) இலங்கையில் 1970 இன் பின்னர் வளர்ச்சியடைந்து வருகின்ற தொழிலின்மை. (தொழிலின்மை இன்றுகூட தொழிற்படையில் நூற்றுக்கு 7 வீதத்தைவிட அதிக மட்டத்தில் உள்ளது. இதில் முழுமையாகவே இளம் சந்ததியினரே உள்ளனர்.)

(ஈ) அண்மிய இரண்டு தசாப்த காலத்தினுள் உருவாகிய தொழில் வாய்ப்புக்கள் இளம் சந்ததியினரை உடனடித் திருமணங்களுக்குத் தயார் செய்யக்கூடியவையாக இல்லாதிருத்தல் (இராணுவப் படைகளிலும் ஆடைத் தொழிற்துறைகளிலுமுள்ள தொழில்கள் தொடர்பான சமூக மதிப்பீடுகள் கவரக் கூடியனவாக இல்லாமை.).

(உ) விவாகமாவதற்கு முன்னர் பாலியல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் போக்குகள் அதிகரித்துள்ளமை (இது விவாகம் தொடர்பாகவுள்ள உற்சாகம் வீழ்ச்சியுறுவதற்கு ஏதுவாகக் கூடிய ஒரு விடயமாகலாம் என சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.).

(ஊ) விவாகம் சந்தையின் பிடிக்குள் சிக்கியிருத்தல் (விவாகத்தின் போது சீதனம் கவர்ச்சிகரமானதொரு காரணியாக மாறியுள்ளமை.).

(எ) விவாகத்தைப் பேணி வருவதற்குத் தேவையான பொருளாதாரப் பின்னணியைத் தயார் செய்துகொள்வதற்குக் குறிப்பிடத்தக்கதொரு காலம் எடுத்தல். (திருமண வாழ்வின் வடிவத்துக்கு ஏற்ப செலவுக்குத் தேவையான பணத்தைத் தேடிக்கொள்வதற்கும் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் முடியாதுள்ளமை.)

இற்றையாகும்போது விவாகமாகும் நான்கு வயதுப் பிரிவின் விவாக வயதெல்லை உயர்ந்துள்ளது (அதாவது. 15 - 19, 20 - 24, 25 - 29, 30 - 35 ஆகிய பிரிவினர்கள்). உயிரியல் ரீதியில் பொதுவாக ஒரு பெண்ணுடைய விவாகம் ஒரு வருடம் தாமதமாகின்றபோது, இனப்பெருக்க ஆற்றல் 1/5 ஆல் வீழ்ச்சியுறுமென்பதோடு, ஐந்து வருடங்கள் தாமதமாயின் இனப்பெருக்க ஆற்றல் 1 ஆல் வீழ்ச்சியுறுகின்றது. இதன்படி விவாகமாகும் வயதெல்லை உயர்ந்து செல்வதென்பது மொத்த இனப் பெருக்க

ஆற்றல் வீழ்ச்சியுறுவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பிரதானமான ஆக்கக் கூறொன்றாவதோடு, குடித்தொகைக் கூம்பு வடிவில் முதுமையடைந்தவர்களின் மட்டம் விரிவடைவதற்கும் காரணமாயமைகின்றது.

### விவாக அமைப்பினுள் பிள்ளைகள் தொடர்பாகவுள்ள மனப்பாங்குகளும் தேவைகளும் மாற்றமுறுவதற்கான காரணங்கள்

(அ) மத்திய வகுப்புச் சமூகம் விரிவடைந்ததன் காரணமாக, சம்பளம் மற்றும் தொழில் தொடர்பாக ஏற்பட்டுள்ள மாற்றங்கள் (இதன்படி கமத்தொழில் சமூகங்களைப் போன்று சீவனோபாயத்திற்காக குடும்பத்திலிருந்தே உழைப்புக் குடும்பமொன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை ஏற்படுவதில்லை. பொருளாதாரக் கட்டமைப்பின் தேவைகளுக்கு ஏற்புடைய விதத்தில் கூட்டுக் குடும்ப முறையிலிருந்து தனிக் குடும்ப முறைக்கு மாற்றமுற்றதன் காரணத்தினால் இரண்டு பிள்ளைகளுக்கு மட்டும் மட்டுப்பட்டதாயமைந்துள்ளது.).

(ஆ) வீட்டுக்கு வெளியே நாளாந்தக் கடமைகளில் ஆண், பெண் இருபாலாரும் ஈடுபடுவதால் பிள்ளைகளுடைய தேவைகளை மட்டுப்படுத்துதல். (இலங்கையில் பெண்களுடைய கடமைகள் மாற்றத்துக்குள்ளாகி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதொரு காரணியாகும்.)

(இ) விவாக அமைப்பினுள் அண்மைக் காலங்களாக ஏற்பட்டு வருகின்ற பொருளாதாரக் கஷ்ட நிலைகளின் காரணமாக பிள்ளைகளைப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் மதிப்பீடு செய்வதற்குள்ள வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றமை (விலை ஏற்றங்கள், குறைந்த சம்பளம், காணிப் பற்றாக்குறை, வீட்டு வசதிகள் இல்லாமை போன்றவற்றை இதற்கு உதாரணங்களாகக் காட்டலாம்.).

(ஈ) முழுமையாவே பிள்ளைப்பேறு தொடர்பாக சமூகம் பூராவும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் தொடர்பான அறிவைப் பயன்படுத்துதல் (இற்றையாகும்போது இலங்கையின் திருமணமாகிய பெண்களில் நூற்றுக்கு 70 வீதமும் மத்திய வகுப்புப் பெண்களில் நூற்றுக்குத் 90 வீதமும் ஏதோ ஒரு குடும்பக் கட்டுப்பாட்டு முறையொன்றைக் கடைப்பிடிக்கிறார்களென்பது மக்கள் வங்கியால் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் மூலம் அறியவந்துள்ளது. இலங்கைக் குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்கம் 1963 இன் பின்னர் ஆரம்பித்த வேலைத் திட்டம் 1980 ஆம் ஆண்டாகும்போது கிராம மட்டம் வரை பரவியது. 'சிறு குடும்பம் பொன்னானது' என்ற தொனிப் பொருள் பொதுசன ஊடகங்களினூடாகப் பாரிய அளவில் விளம்பரப்படுத்தப்பட்டு, இரு பிள்ளைகளுடன் கூடிய குடும்பம் முன்னுதாரணமானதொரு குடும்பமென்ற சமூக வரவேற்பைப் பெற்றது.).

(உ) கடந்த இரண்டு தசாப்த காலத்தினுள் இலங்கையிலிருந்து வெளிநாட்டுத் தொழில்களை நாடி வெளியேறியோர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை (குறிப்பாக, மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணியாளர் சேவைக்காக கிராம மட்டத்தில் திருமணமான பெண்கள் வெளியேறியமை பிள்ளைப் பேற்றை மட்டுப்படுத்துவதில் நிச்சயமாகவே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.).

இந்த அனைத்து விடயங்களையும் கவனிக்கின்றபோது, இலங்கை முகம் கொடுத்துள்ள குறைவிருத்தி நிலையானது, பிறப்புப் பின்னடைவுக் காரணியொன்றாகக் கூடுதலாகச் செயற்பட்டுள்ளதென்று சமூகவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அதேபோன்று, இற்றையாகும்போது அறுபத்தைந்து வயதைத் தாண்டிய ஒருவருக்கு (65+) இலங்கை தொடர்பாகவுள்ள பொருளாதார அனுபவம் யாதெனில், தனது வாழ்நாள் முழுவதும் குறை அபிவிருத்தியினுள் கழிந்துள்ளதென்பதேயாகும். ஆயினும், 1942 இல் யுத்தத்தினால் அழிவுற்ற ஜப்பான் 2002 ஆகும்போது உலகின் பலம்வாய்ந்த அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஒன்றாக மாறியுள்ளது. புதிதாகக் கிடைத்துள்ள அறிக்கையின்படி, ஜப்பான் அந்நாட்டிலுள்ள 150 வயதைத் தாண்டிய முதியோர்களைப் பாதுகாப்பதோடு, நீண்டகாலம் வாழ்வதற்கான இரகசியம் தொடர்பாக ஆராய்ச்சிகளையும் நடத்துகின்றது. ஆயினும், தற்போது இலங்கையின் நிலையை ஆராய்கின்றபோது வறுமையும் தொழிலின்மையும் வளர்ச்சியடைந்து வருவதன் காரணமாக எதிர்காலத்தில் மேலும் சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைவடைவதற்கே வாய்ப்புள்ளது. ஏனென்றால், முழுச் சமூகத்தையும் தழுவியதான சமூக, பொருளாதார வேலைத் திட்டமொன்றின் மூலம் உற்பத்தியை மேம்படுத்துதல் அல்லது தொழில்களை உருவாக்குதல் போன்ற தேவைகள் ஈடேறுவதற்குள்ள வாய்ப்புகள் குறைந்து வருவதன் காரணத்தினாலாகும். அவ்வாறெனில், விவாகமாகும் வயதெல்லை குறைவடைவதற்கோ, அல்லது விவாக அமைப்பினுள் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கோ ஏற்றவிதத்தில் வடிவமையுமென்று எதிர்பார்க்கமுடியாது. ஆதலால் குடித்தொகை முதுமையடைவதன் காரணமாக அடித்தளம் கனமான குடித்தொகைக் கூம்பு படிப்படியாக வடிவத்தை மாற்றி மேல் மட்டங்கள் விரிவடைந்து வருவதைக் காணலாம். இலங்கையின் 19,408,635 பேரைக் கொண்ட குடித்தொகையில் (2001 ஜூலை) 0 - 14 வயதுக்கு இடைப்பட்ட பிரிவினர் நூற்றுக்கு 25.99 வீதமாவதுடன், 15 - 64 வயதுக்கு இடைப்பட்டோர் நூற்றுக்கு 67.39 வீதமும் 65 வயதும் அதற்கு மேற்பட்டோர் தொகையும் நூற்றுக்கு 6.62 வீதமாகவும் உள்ளமை இதன் பெறுபேறாகும். 1981 இல் இருந்து 2001 வரையிலான தொகை மதிப்பீட்டு வருடங்களுக்கு இடையிலான காலகட்டத்தினுள் படிப்படியாகக் குடித்தொகைப் பரம்பலில் 18 வயதுக்குக் குறைந்த குடித்தொகையின் நூற்று வீதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, குடித்தொகை முதுமையடைவதன் இயல்பைக் காட்டுகின்ற காரணியொன்றாகுமெனக் கருதலாம். 18 வயதுக்குக் குறைந்த குடித்தொகையின் நூற்றுவீதப் பங்களிப்பு 1981 இல் நூற்றுக்கு 41.6 வீதத்திலிருந்து 2001 இல் நூற்றுக்கு 32.9 வீதம் வரை வீழ்ச்சியுற்றுள்ளது. இதன்படி 18 வயதுக்கு மேற்பட்ட குடித்தொகையின் நூற்றுவீதப் பங்களிப்பு 1981 இல் நூற்றுக்கு 58.4 வீதத்திலிருந்து 2001 இல் நூற்றுக்கு 67.1 வீதம் வரை உயர்ந்துள்ளது. இது நீண்டகால சமூக, பொருளாதார செயற்பாட்டின் பெறுபேறைக் குறிப்பிடுகின்ற பாரியதொரு அடையாளமாகும். இலங்கையின் குடித்தொகை முதுமையடைதல் மற்றும் அதனைத் தழுவியதாக மேலெழுகின்ற ஒருசில சமூக, பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக அடுத்துவரும் இதழில் கலந்துரையாடப்படும்.





# நாணயக் கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பான புதியதொரு வேலைத்திட்டம்

**குசுமா தசநாயக்க**
உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

நாட்டின் பணவீக்கத்தைக் குறைத்து விலையின் நிலைப்பாட்டைப் பேணி வரும் பொருட்டு நாணயக் கொள்கையை அமுலுக்குக் கொண்டுவருதல் மத்திய வங்கியின் அடிப்படைக் கடமைப் பொறுப்புகளில் ஒன்றாகும். மத்திய வங்கி, பொருத்தமான விதத்தில் பண நிரம்பலைக் கையாள்வதன் மூலமே விலையின் நிலைப்பாட்டைப் பேணி வருகின்றது. இதற்கெனப் பயன்படுத்தக்கூடிய பல கருவிகள் உள்ளன. இவற்றில் ஒருசில சந்தைச் செயற்பாட்டின் அடிப்படையில் அமையாததான, வங்கிக் கடன்கள் மீது வரையறைகளை விதித்தில், மிகக் கூடுதலான சட்டரீதியான ஒதுக்கு நிதிகளை விதித்தல் போன்ற கடுமையான சந்தை நலனற்ற கருவிகளாயுள்ளதோடு, உலகில் பெரும்பாலான நாடுகள், குறிப்பாக முன்னேறிய நாடுகள் இவ்வாறான கருவிகளிலிருந்து விலகி சந்தைச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட சந்தை நலன்மிக்க கருவிகளின் பக்கம் கவனம் செலுத்தி வருகின்றன. இலங்கையும் இதே வழியில் சென்று, நாணயக் கொள்கையை அமுலுக்குக் கொண்டுவருகின்றபோது, சந்தை நலன் மிக்க திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கு (Open Market Operations - OMO) முதலிடம் வழங்கியுள்ளது.

### திறந்த சந்தைத் தொழிற்பாடுகளென எதனைக் கருதுகின்றோம்

திறந்த சந்தைத் தொழிற்பாடுகளென்பது அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்தால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையங்களை திறந்த சந்தையில் கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்வதன் மூலம் சந்தைத் திரவத்தன்மையிலும் வட்டி வீதங்களிலும் செல்வாக்குச் செலுத்துவதாகும். இதற்கு மேலதிகமாக, சந்தையின் மேலதிகத் திரவத் தன்மையை ஈர்த்துக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியிடம் போதியளவு அரச பிணையங்கள் இல்லாதபோது, மத்திய வங்கிப் பிணையங்களை வெளியிடுகின்ற அதிகாரமும் மத்திய வங்கிக்கு உள்ளது. மத்திய வங்கியினால் அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்தால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையங்கள் அல்லது மத்திய வங்கிப் பிணையங்கள் விற்பனை செய்யப்படுகின்றபோது வர்த்தக வங்கிகள் அவற்றைக் கொள்வனவு செய்வதால் வர்த்தக வங்கிகளிடமுள்ள நிதியங்கள் மத்திய வங்கியை வந்தடைவதோடு, அதன் மூலம் வர்த்தக வங்கிகளின் கடன் படைக்கும் ஆற்றல் மட்டுப்படுத்தப்படுகின்றது. மறுபுறம், வர்த்தக வங்கிகள் தம்மிடமுள்ள பிணையங்களை மத்திய வங்கிக்கு விற்பனை செய்கின்றபோது, மத்திய வங்கியிலிருந்து பணம் வெளியிடப்படுவதன் காரணத்தினால் வர்த்தக வங்கிகளின் நிதியத் தளம் விரிவடைவதோடு, அதன் மூலம் வர்த்தக வங்கிகளின் கடன் படைக்கும் ஆற்றலும் அதிகரிக்கின்றது. திறந்த பொருளாதாரத் தொழிற்பாடுகளின் மூலம் நாணய வழங்கலில் சுருக்கத்தை அல்லது விரிவை ஏற்படுத்துதலை, ஏனைய நாணயக் கொள்கைக் கருவிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது தாமதமின்றிச் செய்யக்கூடியதாயுள்ளது.

### திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் தற்போது வழங்கப்படுகின்ற வசதிகளும் அவற்றின் பலவீனங்களும்

தற்போதுள்ள முறையின்படி, திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் மத்திய வங்கியானது, மீள் கொள்வனவு, நேர்மாற்று மீள் கொள்வனவு, அரச பிணையங்கள் கழிவிடல் மற்றும் மீள் கழிவிடல் வசதிகளை வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் வழங்குகின்றது. மீள் கொள்வனவு என்பது ஏதேனுமொரு குறிப்பிட்ட தினத்தில் (குறைந்தபட்சம் ஒரு தினத்தில் அல்லது கூடியபட்சம் ஏழு தினங்களில்) குறிப்பிட்டதொரு வட்டி வீதத்தில் மீள் விற்பனை செய்கின்ற உடன்பாட்டின் மீது அரச திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதாகுமென்பதோடு, இதன்மூலம் குறுகிய கால ரீதியில் திரவத்தன்மையானது சந்தையிலிருந்து மத்திய வங்கிக்கு ஈர்க்கப்படுகின்றது. நேர்மாற்று மீள்கொள்வனவு என்பது இதே விதத்தில் திறைசேரி உண்டியல்களை அல்லது முறிகளை சந்தையிலிருந்து கொள்வனவு செய்வதாகுமென்பதோடு, இதன்மூலம் குறுகியகால ரீதியில் சந்தைக்குத் திரவத்தன்மை வழங்கப்படுகின்றது. மத்திய வங்கிக்குரிய திறைசேரி உண்டியல்கள் இரண்டாந்தரச் சந்தையில் விற்பனை செய்யப்படுதல் கழிவிடல் எனப்படுவதோடு, இரண்டாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்படுதல் மீள் கழிவிடல் எனப்படும். இதன்மூலம் ஒப்பீட்டளவில் நீண்டகால அடிப்படையில் திரவத் தன்மை மத்திய வங்கிக்கு ஈர்க்கப்படுதல் (கழிவிடல்) அல்லது திரவத்தன்மை வழங்கப்படுதல் (மீள்கழிவிடல்) நடைபெறுகின்றது. இந்த வசதிகள் வழங்கப்படுகின்றபோது, அதற்குரிய வட்டி வீதங்கள் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படுவதோடு, இவ் வசதிகள் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் பங்குபற்றுகின்ற

நிதி நிறுவனங்களின் அதாவது, வர்த்தக வங்கிகளினதும் முதனிலை வணிகர்களினதும் தற்றுணிபிற்கு ஏற்பவே பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

அதேபோன்று இவ்வங்கிகள், மத்திய வங்கியால் தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதங்களுக்குப் பதிலாக சந்தையின் மீது அமையப்பெற்ற வட்டி வீதங்களின் மீது வழங்கப்படுமெனில், அது சந்தை நலன்மிக்க நாணயக் கொள்கைக் கருவிகளின் பயன்பாட்டை நோக்கிய மத்திய வங்கிக் கொள்கையுடன் மிகவும் பொருந்துவதாக அமையும். மத்திய வங்கியானது, நாணயக் கொள்கை முகாமைத்துவத்தின் போது ஒதுக்குப் பணத் தொகையை இலக்காகக் கொள்வதால், மத்திய வங்கிக்கு தற்றுணிபின்படி சந்தைத் திரவத்தன்மையை நிருவகிக்கக்கூடிய ரீதியில் கருவியொன்று இருத்தல் அத்தியாவசியமாகின்றது.

இத்தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு மத்திய வங்கிக்குத் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைச் செயற்படுத்துகின்ற புதிய முறையொன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. நாணயச் சந்தைத் தேவைகளுக்கும், நாணயக் கொள்கைகளுக்கும் இணங்குகின்றவாறு இம்முறையின்கீழ் நாட்டின் திரவத்தன்மையை வழிநடத்துவதற்கு மத்திய வங்கி எப்பொழுதும் தலையிடுவதன் காரணத்தினால் இதனை முனைப்பான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் (Active Open Market Operations) எனக் குறிப்பிடுகின்றோம்.

இம்முறையிலுள்ள பண்புகள் யாதெனில்,

1. வட்டி வீத இடை வழியொன்றை (வீச்சு எல்லை) நிறுவுதல் (Interest rate corridor)
2. வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதத்தை வட்டி இடைவழியினுள் (வீச்சு எல்லை) நிலையாகப் பேணி வரும் பொருட்டு மீள் கொள்வனவுக்காக அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுக்காக நாளாந்த ஏலவிற்பனைகளை நடத்துதல்.
3. நிலையான வசதிகள் (Standing Facilities)
4. திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் இரண்டாம்தரச் சந்தையில் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தல் மத்திய வங்கியின் தற்றுணிபின் மீது (நீண்டகாலத் திரவத் தன்மையை வழங்குதல் அல்லது ஈர்த்துக்கொள்ளுதல்) மாத்திரம் நடத்தப்படுதல்.

## வட்டிவீத இடைவழி (வீச்சு எல்லை) (Interest Rate Corridor)

இம்முறையின் கீழ் மத்திய வங்கியானது, வட்டி வீதங்களுக்காக இடைவழியொன்றை (corridor) நிறுவுகின்றது. இவ் இடைவழியின் உச்ச எல்லை நேர்மாற்று மீள்கொள்வனவு வீதமாயிருப்பதோடு, கீழ் எல்லை மீள் கொள்வனவு வீதமாகும். இவ்வாறு இடைவழியொன்று நிறுவப்பட்டதும், வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதத்தின் வேறுபாடுகள் அவ் இடைவழிக்குள் மட்டுப்படுத்தப்படுகின்றன. நாட்டின் நாணய நிரம்பலின், குறிப்பாக ஒதுக்குப் பணத்தின் செயலாற்றுகை, அவற்றின் இலக்குத் தொகையுடன் ஒப்பிடப்பட்டு, இவ் இடைவழி மாதாந்தம் ஆய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. அதாவது, உண்மையான ஒதுக்குப் பணத்தொகை இலக்குத் தொகையைவிட அதிகமாயிருப்பின் இடைவழி இலக்கு ஒதுக்குப் பணத்தொகையுடன் இணங்காதிருப்பதால் நாணயக் கொள்கை மேலும் கடுமையாக்கப்பட்டு அது மேல் நோக்கித் திருத்தப்படுகின்றது. அவ்வாறே உண்மையான ஒதுக்குப் பணத்தொகை, இலக்குப் பணத்தொகையைவிடக் குறைவாக இருப்பின் நாணயக் கொள்கையைத் தளர்த்தி இடைவழி கீழ் நோக்கித் திருத்தப்படுகின்றது. இவ்வாறு இடைவழியின் மூலம் நாணயக் கொள்கையின் மாற்றங்கள் தொடர்பாக சந்தைக்குச் சமிக்ஞைகள் வழங்கப்படுகின்றன. இந்த மாதாந்த ஆய்வின்போது, எடுக்கப்படும் தீர்மானங்கள், அத்தீர்மானங்களுக்கு அடிப்படையான விடயங்களின் மீளாய்வொன்றுடன் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. இதனால் நாணயக் கொள்கை ரீதியான தீர்மானங்கள் தொடர்பாக சந்தையின் அங்கத்தவர்கள் கூடுதலாக அறிவூட்டப்படுவதோடு, அக் காரணத்தினால் தேவையற்ற பாதகமான ஊக வியாபாரத்துக்குள்ள வாய்ப்புக்கள் குறைவடைகின்றன.

## மீள்கொள்வனவு/நேர்மாற்று மீள்கொள்வனவு நாளாந்த ஏலம்

நாட்டின் நாணயக் கொள்கைக்கு இணங்க பொருத்தமான மட்டத்தில் இடைவழியினுள் (corridor) வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதத்தை நிலையாகப் பேணி வருவதற்கு திறந்த சந்தை தொழிற்படுகின்றது. உதாரணமாக, சந்தைச் சமநிலையொன்று நிலவுகின்ற சந்தர்ப்பத்தில் வங்கிகளுக்கு தமது திரவத்தன்மைத் தேவைகளை முழுமையாகவே வங்கிகளுக்கு இடையிலான சந்தையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியுமாயுள்ளதோடு, அவ்வாறான தொரு சந்தர்ப்பத்தில் வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதம் இடைவழியினுள் (corridor) தீர்மானிக்கப்படும். அத்துடன், இது இதற்கான மிகப் பொருத்தமான மட்டமாகவும் இருக்கும். ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் சந்தைத் திரவத் தன்மைப் பற்றாக்குறையொன்று ஏற்படுமிடத்து, இதன் காரணமாக வட்டி வீதம் இடைவழியின் (corridor) உச்ச எல்லையை நோக்கி நகருமாதலால், அதனைத் தடுத்து வட்டி வீதத்தை நிலையாக வைத்திருக்கும் பொருட்டும், வங்கி சந்தைப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டும் தேவையான திரவத்தன்மையை வழங்கும். இது நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலத்தின் மூலமே வழங்கப்படுகின்றது. இவ்வாறே சந்தைத் திரவத்தன்மை மிகையொன்று ஏற்படுமிடத்து, மீள்கொள்வனவு ஏலமொன்றின் மூலம் இம் மிகை வங்கியினுள் ஈர்த்துக்கொள்ளப்படுகின்றது. இச் செயற்பாட்டை நடைமுறை ரீதியில் செய்கின்றபோது, வங்கி நாளாந்தம் சந்தைத் திரவத்தன்மை தொடர்பான மதிப்பீடொன்றை நடத்துமென்பதோடு, அதற்கிணங்க சந்தைக்கு விநியோகிக்க வேண்டிய அல்லது அதிலிருந்து ஈர்க்கப்படவேண்டிய திரவத்தன்மைத் தொகை தொடர்பாகத் தீர்மானித்து அதனைச் சந்தைக்கு அறிவிக்கும். அப்போது வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் தமக்குத் தேவையான தொகையையும், அவை எந்த வட்டி வீதத்தின் கீழ் தேவைப்படுகின்றதென்பதையும் மத்திய வங்கிக்கு அறிவிக்கின்றன. அதாவது, தமது கேள்வி விலையைச் சமர்ப்பிப்பார்கள். இவ்வாறு ஏலத்தின் மூலம் இத்திரவத்தன்மை வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

## நிலையான வசதிகள் (Standing Facilities)

நாளாந்த ஏலத்தின் பின்னர் மேலும் சந்தைப் பற்றாக்குறையோ, மிகையோ ஏற்படாதென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், ஏதேனுமொரு காரணத்தினால் ஏலத்தின் பின்னரும் ஒரு சில வங்கிகளில் நிதிய மிகையோ பற்றாக்குறையோ இருப்பதற்கு வாய்ப்புண்டு. நாளின் இறுதியில் ஏதேனுமொரு வங்கியில் அவ்வாறான நாணய மிகையொன்று இருப்பின் அவ் வங்கிக்கு அதனை மத்திய வங்கியின் மீள்கொள்வனவு கருமபீடத்தினூடாக முதலீடு செய்ய முடியுமாயுள்ளதோடு, பற்றாக்குறையொன்று ஏற்படுமிடத்து மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கருமபீடத்தினூடாக பணத்தைக் கடனாகப் பெற்றுக்கொள்ளவும் முடியும். இவ்வசதியை நிலையான வசதியெனக் குறிப்பிடுவதோடு, இதற்குரிய வட்டிவீதங்களை தண்ட வட்டி வீதங்களெனக் கருதுகிறோம். இவை நாளாந்த ஏலத்தில் கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற வட்டி வீதங்களோடு ஒப்பிடப்படுகின்றபோதே அவ்வாறு கருதப்படுகின்றன. மீள்கொள்வனவு வீதம் நிச்சயமாக ஏலத்தில் கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற வீதத்தைவிடவும் குறைவாக இருக்குமென்பதோடு, நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் அதைவிடக் கூடுதலாக இருக்கும். ஆதலால், தனது திரவத்தன்மைத் தேவைகளை நாளாந்த ஏலத்தின் மூலம் பெற்றுக்கொள்கின்றபோது, மீள்கொள்வனவுக்காக மிகச் சிறப்பானதொரு விளைவு கிடைப்பதோடு, நேர்மாற்று மீள்கொள்வனவுக்காக குறைந்ததொரு வட்டி வீதமே

செலுத்தவேண்டியேற்படுகின்றது. ஆதலால், வர்த்தக வங்கிகளால் மிகச் சரியான திரவத்தன்மை மதிப்பீடுகள் தயாரிக்கப்படுதல் முக்கியமாயுள்ளன. அதன்மூலம் மீள்கொள் வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுக் கரும பீடத்தினூடாக வசதிகளைப் பெற்றுக்கொள்வதைக் குறைத்துக் கொள்ள முடியுமாவதோடு அத் தேவைகளை ஏலத்தினூடாகப் பெற்றுக்கொள்வதன் மூலம் தமது நிதியச் செலவினங்களைக் குறைத்துக் கொள்ளவும் முடியுமாயிருக்கும்.

## திறைசேரி உண்டியல்களை/ முறிகளை இரண்டாம் தரச் சந்தையில் விற்பனை செய்தலும் கொள்வனவு செய்தலும்

புதிய முறை ஆரம்பிக்கப்படுவதைத் தொடர்ந்து இரண்டாந்தர கருமபீடத்தில் உண்டியல்களைக் கழிவிடல் (விற்பனை செய்தல்) மற்றும் மீள் கழிவிடல் (கொள்வனவு செய்தல்) நடைபெறும் விதம் மாற்றப்படும். இற்றைவரை இவ்வசதிகளை நாளாந்தம் மத்திய வங்கி அறிவிக்கின்ற வட்டி வீதத்தின் கீழ் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் தமது தற்றுணிபின்படி பெற்றுக்கொள்ள முடியு மாயிருந்தபோதிலும், புதிய முறையின்கீழ் இவ் வசதிகள், மத்திய வங்கியின் தற்றுணிபின்படி நீண்டகால ரீதியில் சந்தைக்குத் திரவத் தன்மையை வழங்குவதற்கு அல்லது சந்தையிலிருந்து திரவத்தன்மையை ஈர்த்துக்கொள்வதற்கு மட்டுமே வழங்கப்படும். இவ் வசதியும் ஏலவிற்பனை முறையொன்றின் மூலமே செயற்படுத்தப்படும். உதாரணமாக, மத்திய வங்கி பாரியதொரு பணத்தொகையை நாளாந்தம் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலத்தின் மூலம் தொடர்ந்து நீண்ட காலத்துக்கு சந்தைக்கு வழங்காது. சந்தைத் திரவத் தன்மையில் நீண்ட காலப் பற்றாக்குறையொன்று இதன் மூலம் பிரதிபலிக்கும். அப்போது இந்த நீண்டகாலப் பற்றாக்குறையை இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களை/முறிகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் நீக்கலாம்.

## உத்தேச முறையிலுள்ள அனுகூலங்கள்

இம்முறை வர்த்தக வங்கிகளுக்கும் மற்றும் முதனிலை வணிகர்களுக்கும் போன்றே மத்திய வங்கிக்கும் அனுகூலமான தாகும். திறந்த சந்தை வசதிகள் நிருவாக ரீதியில் தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதங் களுக்குப் பதிலாக சந்தை வட்டி வீதங்களின் மீது வழங்கப்படுவதோடு, பொதுவாக இது மீள்கொள்வனவு வீதத்துக்கும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்துக்கும் இடையிலான வட்டி இடைவழியின் (corridor) மத்திய மட்டத்தில் தீர்மானிக்கப்படுகின்றது. ஆதலால், வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் அவர்களுடைய மீள்கொள்வனவு வசதி களுக்கு தற்போதுள்ளதைவிடக் கூடுதலான வட்டி வீதமொன்று கிடைப்பதோடு, நேர்மாற்று மீள்கொள்வனவுக்கு தற்போதுள்ளதைவிடக் குறைவானதொரு வட்டி வீதத்தைச் செலுத்த வேண்டி ஏற்படுகின்றது. மத்திய வங்கி, வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதத்தைக் குறுகியதொரு வீச்சினுள் நிலையாகப் பேணி வரும் பொருட்டு முனைப்பாக சந்தையில் தலையிடுவதன் காரணத்தினால் சந்தை அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதோடு, வட்டி வீதங்களின் தளம்பல்களையும் குறைத்துக்கொள்ள முடியுமாயிருக்கும். அதேபோன்று இம்முறையின் கீழ் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை இலக்குகள் மற்றும் பேரண்டப் பொருளாதார மாறியல் உருக்களின் செயலாற்றுகை தொடர்பான முழுமையானதொரு விபரம் வழங்கப் படுவதால் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு மிகத் தர்க்க ரீதியிலான தீர்மானங்களை மேற்கொள்ள முடியுமாகின்றது. அதேபோன்று நாணயக் கொள்கைத் தீர்மானங்கள், அவற்றுக்கு அடிப்படையாய் அமைந்த நிலைமைகள் தொடர்பான விபரங்களோடு அறிவிக்கப் படுகின்றன. இதனால், தேவையற்ற பாதகமான ஊகவியாபாரத்துக்குள்ள வாய்ப்புகள் வரையறுக்கப்படுகின்றன. அதேபோன்று இம்முறையின் ஊடாக வர்த்தக வங்கிகள் தமது நிதியங்களை தொழிற்றிறனுடனான முன்னெச்சரிக்கையுடன் நிருவகிப்பதற்கு ஊக்குவிக்கப்படுவதுடன் இதனால் வங்கி முறையின் வினைத்திறனும் அதிகரிக்கின்றது. அத்துடன் மத்திய வங்கிக்கு இம்முறையின் கீழ் தனது நாணயக் கொள்கையின் தேவைகளுக்கு ஏற்புடையவாறு சந்தைத் திரவத்தன்மையை வழிநடத்த முடியுமாதலால் நாணயக் கொள்கையின் இலக்குகளை மிக வினைத்திறனுடன் கூடியதாக ஈட்டிக் கொள்ளவும் முடியுமாகின்றது. இது நாணயக் கொள்கையின் இறுதி நோக்கமான விலை நிலைப்பாட்டை ஈட்டிக்கொள்வதற்கும் உதவியாயமையும்.

# வறுமை ஒழிப்பும் சிறு கடன் திட்டங்களும்

ஜீ. தம்மிக குணரத்ன, நாணயத் திணைக்களம்

**முன்னேற்ற** மடைந்துவரும் பெரும்பாலான நாடுகளின் குடித்தொகையில் பெரும் பகுதியினர் வறுமையில் வாடுகின்ற நகர மற்றும் கிராமியப் பிரதேசங்களில் வாழும் வறியவர்களாவார்கள். கிராமிய வறியவர்களில் கூடுதலானோர் பெரும்பாலும் காணியற்ற கமத்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தொழிலாளர்கள் அல்லது வாழ்வுத் தேவை மட்டத்தைவிடக் குறைந்த வருமானத்தை உழைக்கின்ற காணிகளற்ற அல்லது சிறியதொரு காணித் துண்டுக்கு உரிமை கோருகின்ற கமக்காரர்களாவார்கள். இதற்கும் மேலதிகமாக நாளாந்தச் சம்பளத்தைப் பெறக்கூடிய ஏதேனுமொரு அலுவலில் ஈடுபடுகின்ற சிறியதொரு தொகையினரும் உள்ளனர். இவ்வனைவருக்கும் தமது உழைப்பின் மீது மாத்திரமே நம்பிக்கை வைக்கக்கூடியதாயுள்ளது. இதன் காரணமாக முதுமையடைகின்றபோது உடல் ஊனமுற்று இவர்கள் அடுத்த தலைமுறையில் தங்கி வாழவேண்டியேற்படுதல் தானாகவே நிகழ்கின்றது.

கிராமங்களில் வாழ்கின்ற பெரும்பாலான வறியவர்கள் உழைக்கின்ற வருமானம் மிகச் சிறு தொகையாயிருப்பதோடு, இவர்கள் முகம்கொடுக்க நேரிட்டுள்ள பொருளாதார மற்றும் சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இவர்கள் உழைக்கின்ற வருமானம் எவ்விதத்திலும் போதுமானதல்ல. இதனால் இவர்களுடைய எதிர்காலத்துக்காக அல்லது தமது எதிர்காலச் சந்ததியினரின் பயன்பாட்டுக்காக இவர்களால் எதனையும் சேமிக்க முடியாதுள்ளது. வறியவர்கள் முகம்கொடுக்கின்ற இப்பிரச்சினைகளைப் போன்றே இந்நாடுகளின் அரசாங்கமும் இதனால் பெரும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளன.

ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு காலம் முழு இலங்கையும் பிரித்தானிய ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. பிரித்தானிய ஆதிக்கத்தின் கீழ் வருவதற்கு முன்னர் மேலும் ஒன்றரை நூற்றாண்டுக்கு அண்மியதொரு காலம் இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் போர்த்துக்கேயர்களினதும் ஒல்லாந்தர்களினதும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. ஐரோப்பியர்களது கட்டுப்பாட்டின்கீழ் இருந்த காலப்பகுதியினுள் தேசிய மரபுரிமைகளும் நாட்டின் பொருளாதாரமும் பல்வேறான கலப்புகளுக்கும் உள்ளாயின.

பிரித்தானிய பேரரசிலிருந்து விடுதலை பெற்றதன் பின்னர் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை முன்னிட்டு ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆட்சியிலிருந்த அரசுகள் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பல்வேறான சர்வதேச அமைப்புக்களினூடாக நாட்டின் அபிவிருத்தியை முன்னிட்டு பல்வேறு விதத்திலும் எண்ணிலடங்கா முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இவற்றில் அரசாங்கத்தைத் தவிர அரச சார்பற்ற நிறுவனங்கள் குறிப்பாக கிராம அபிவிருத்தியை முன்னிட்டுத் தலையிட்டுள்ளன. எந்தவொரு நாட்டிலும் நிருவாகத்திலுள்ள அரசுக்கு தனது நோக்கங்களில் தமது நாட்டிலுள்ள வறுமையைத் தணித்தல் அல்லது ஒழித்தல் என்ற நோக்கம் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டி வருவதோடு, அது அவ்வரசின் பொறுப்பாகவும் உள்ளது. இந் நிலைமையின் கீழ் பெரும்பாலான மூன்றாம் உலகநாடுகளின் அரசுகள் தமது நாட்டிலுள்ள வறியவர்களின் அடிப்படைத் தேவைகள் உட்பட சமூகப் பிரச்சினைகள் பலவற்றையும் தீர்க்கும் பொருட்டு தொடர்ச்சியாகப் பல்வேறு விதங்களிலும் செயற்பட்டு வருகின்றன. இந் நாடுகளின் குடித்தொகையில் பெரும் பகுதியினர் குறைந்த மூலதனம், குறைந்த உற்பத்தி, குறைந்த வருமானம் மற்றும் குறைந்த சேமிப்பு ஆகியவற்றின் காரணத்தினால் உருவாகின்ற வறுமையின் முரண் சுழற்சியில் சிக்கியுள்ளனர். நாட்டின் குடித்தொகையில் பெரும்பகுதியினர் சதாகாலமும் வறுமையின் அதல பாதாளத்தில் வீழ்ந்திருப்பதன் காரணத்தினால் இந் நாடுகளின் அரசுகள் முகம்கொடுக்க வேண்டிவந்துள்ள மேற்குறிப்பிட்டுள்ள நிலைமைகள் மென்மேலும் பாரதூரமான நிலைக்கு மாறியுள்ளன. இதனால், இச் சவாலை வெற்றிகொள்ளும் பொருட்டு அரசின் உதவியில் தங்கிவாழும் வறியவர்களில் ஒரு பகுதியினரையாவது வாழ்வுத்தேவை மட்டத்திற்கு மேல் வருமானம் பெறக்கூடியதான ஏதேனுமொரு வருமான வழிக்கு இட்டுச் செல்லுதலோ அல்லது ஏதேனுமொரு தொழிலில் ஈடுபடுத்துதலோ கட்டாயமாகச் செய்யப்பட வேண்டியதாயுள்ளது.

## 1. முறைசாரா நிதியியல் சந்தையின் தலையீடு

கிராமியத் துறையில் வாழ்கின்ற வறியவர்களை ஏதேனுமொரு வருமான வழியில் ஈடுபடுத்துகின்றபோது அல்லது அதற்காக இட்டுச் செல்லுகின்றபோது அதற்குத் தேவையான நிதியங்களை எவ்வாறு திரட்டிக் கொள்வது என்பதைப் பற்றி ஆராய வேண்டியுள்ளது. வறுமையின் முரண் சுழற்சிக்குள் சிக்கியுள்ள வறியவர்கள் வாழ்வுத் தேவை மட்டத்தில் அல்லது வாழ்வுத் தேவை மட்டத்தையும் விடக் குறைவான வருமானம் பெறுகின்றவர்களாதலால் இவர்களிடம் ஏதேனுமொரு முதலீட்டில் ஈடுபடுத்தக் கூடியளவு மேலதிகப் பணத் தொகைகள் கிடையாது. அதேபோன்று முறைசார்ந்த நிதியியல் சந்தையின் கவனமும் வறியவர்கள் மீது போதியளவு செலுத்தப்படாமையும் நீண்டகால்மாக நடைபெற்று வந்துள்ளது. இந் நிலைமை இலங்கைக்கு மட்டும் உரித்தானதொன்றல்ல., ஆதலால், இயல்பாகவே முறைசாரா நிதியியல் சந்தை வறியவர்களை ஈர்த்துக்கொண்டது.

முன்னேற்றமடைந்துவரும் பெரும்பாலான நாடுகளில் முறைசாரா நிதியியல் சந்தை கிராமியத் துறைக்குக் கடன் வழங்குவதில் மிக முக்கியமானதொரு கடமைப் பொறுப்பொன்றை நிறைவேற்றுகின்றது. இந்த முறைசாரா நிதியியல் துறை கிராமியத் துறைக்கு மாத்திரமன்றி சமூகத்தில் வாழ்கின்ற மிக வறிய மக்களது கடன் தேவைகளையும் நிறைவேற்றி, தொழில் உருவாக்கத்திலும், வருமானத்தையும் உற்பத்தியையும் மேம்படுத்துவதிலும் மிகப்பெரும் சேவையொன்றை ஈடேற்றுகின்றது. 'முறைசாரா நிதியியல் துறை' எனக் குறிப்பிடுகின்றபோது, பெரும்பாலும், மிகக் கூடுதலான வட்டி வீதமொன்றின் கீழ் கடன் வழங்குகின்ற 'நெருப்பு வட்டிக் காரர்கள்' என்ற கருத்தே நினைவுக்கு வருகின்றது. ஆயினும், நாம் இங்கு 'முறைசாரா நிதியியல் துறை' என அவ்வாறான நெருப்பு வட்டிக்காரர்களை மாத்திரம் குறிப்பிடவில்லை.

முறைசாரா நிதியியல் துறையில் பெருந்தொகையான கடன் வழங்குநர்கள் செயற்படுகின்றார்கள். இதில் நாம் மேலே குறிப்பிட்ட 'நெருப்பு வட்டிக்காரருக்கும்' கடன் வழங்குநர் என்ற ரீதியில் முக்கியமானதொரு இடம் கிடைக்கின்றது. இதற்கு மேலதிகமாக கிராம மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள பல்வேறான சிக்கனச் சங்கங்களும் உள்ளன. இச் சங்கங்களில் ஒரு சில அரசாங்கத்தின் உரிய நிறுவனங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டு தாமே உருவாக்கிக் கொண்ட சட்டவிதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் செயற்பட்டு வருவதோடு, தமது அங்கத்தவர்களின் சேமிப்புக்களை ஒன்று திரட்டுவதையும் அங்கத்தவர்களுக்குத் தேவையான கடன் வழங்குதல்களையும் செய்து வருகின்றன. அதேபோன்று ஒரு கிராமத்தினுள் வெவ்வேறாக நிறுவப்பட்டுள்ள சிறு குழுக்களும் தமது குழு அங்கத்தவர்களிடமுள்ள மேலதிக பணத்தைத் திரட்டி அப்பணத்தையே பயன்படுத்தி அவர்களுடைய கடன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றன. இதற்கும் மேலதிகமாக செயற்படுகின்ற சீட்டுக் குழுக்களும் உள்ளன. இவ்வாறாக முறைசாரா நிதியியல் சந்தையில் பல்வேறான விதங்களிலும் கடன் வழங்குதல்களில் ஈடுபட்டுள்ள அநேகமான நபர்களும் அமைப்புக்களும் உள்ளன.

முறைசாராத் துறை தனது வாடிக்கையாளருக்குக் கடன் வழங்குகின்றபோது முறைசார்ந்த துறை கவனம் செலுத்துவதைப் போன்று திரவத்தன்மை, முதலீட்டுப் பங்களிப்பு, வைப்புக்களின் வளர்ச்சி மற்றும், சட்டரீதியான தன்மை போன்ற நிலைமைகளின்மீது அதிக கவனம் செலுத்துவதில்லை. அதேபோன்று கடன் வழங்குகின்றபோது மேலதிக செலவினத்தையும் ஏற்கவேண்டி வருவதில்லை. இந் நிலைமையின் காரணமாக, இவர்களுடைய கடன் செலவினம் முறைசார்ந்த துறையின் கடன் செலவினத்தைவிட மிகக் குறைந்த மட்டத்திலேயே நிலவுகின்றது. நிலைமை இவ்வாறிருப்பினும், இவர்களுடைய கடன் வட்டி விதங்களை மிக உயர்ந்த மட்டத்தில் பேணி வரத்தக்கதொரு சூழல் இவர்களைச் சுற்றிலும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

## 2. முறைசாரா நிதியியல் சந்தை கடன் வழங்குதல்

முறைசார்ந்த நிதியியல் சந்தையிலுள்ள நிறுவனங்களின் மூலம் தமது வாடிக்கையாளர்களுக்குக் கடன் வழங்கப்படுகின்றபோது, ஒரு சில சட்ட வரையறைகளுக்குட்பட்டு இத் தொழிற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதனால் இந் நிறுவனங்களிலிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்கின்றபோது, நடைபெறுகின்ற குறைபாடுகள் மற்றும் பலவீனங்களென வாடிக்கையாளர்களால் கருதப்படுகின்ற பல்வேறான சட்டவிதிகள், கடன் வரையறைகள் மற்றும் காலதாமதங்கள் போன்ற பல பிரச்சினைகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது. ஆயினும், முறைசாராத் துறையின் மூலம் கடன் வசதிகள் வழங்கப்படுகின்றபோது, மேற்கூறப்பட்ட குறைபாடுகள் மற்றும் பலவீனங்களைத் தவிர்த்து பல்வேறான தொழிற்பாடுகளுக்காகவும் கடன் வசதிகள் வழங்கப்படுகின்றன. இங்கு முறைசாராத் துறையின் அதிகூடிய வட்டி வீதம் தொடர்பாகக் கவனம் செலுத்தாது, கிராமிய வறியவர்கள் இத் துறையை நாடிச் செல்வதற்குக் காரணமாயமைந்த ஒருசில விடயங்கள் தொடர்பாக ஆராய்வது பொருத்தமானதாயிருக்கும்.

- **கடன் தேவைப்படுவதற்கான காரணம்:** முறைசார்ந்த துறை கடன் வழங்குகின்றபோது பெரும்பாலும் ஈமக்கிரியைகள், திருமண வைபவங்கள், நோய்வாய்ப்படல் மற்றும் மதச் சடங்குகள் போன்றவற்றுக்குக் கடன் வசதிகளை வழங்குவதில்லை. ஆயினும், முறைசாரா நிதியியல் துறையானது பெரும்பாலும் கடன் தேவைப்படுவது நுகர்வுக்காகவா, அபிவிருத்திச் செயற்பாட்டுக்காகவா என்பதைப் பற்றிக் கவனஞ் செலுத்துவதில்லை.
- **கடன் தொகையின் அளவு:** முறைசார்ந்த துறையானது கடன் வழங்குகின்றபோது அதற்காக ஏற்கவேண்டி வருகின்ற செலவினத்தைக் கருத்திற்கொண்டு மிகச் சிறிய அளவிலான கடன் வழங்குதல்கள் தொடர்பாகக் கவனம் செலுத்த மாட்டாது. ஏனென்றால், கடன் தொகை சிறியதாயிருப்பினும் அக் கடன் தொகையை வழங்குவதற்கான தொழிற்பாடுகள் நடைபெறுகின்றபோது அதற்காகச் செலவழிக்கப்படுகின்ற காலம் மற்றும் கடிதங்கள், ஆவணங்களைத் தயாரித்தல் போன்றவை பாரிய கடன் தொகையை வழங்குவதற்குப் போன்றே நடைபெற வேண்டியுள்ளதனாலாகும். இதனால் சிறு அளவிலான கடன் தொகையை வழங்குவதற்கும் அதிக செலவினமொன்றை ஏற்கவேண்டி வருகின்றது. இந் நிலைமை முறைசார்ந்த நிதியியல் துறை சிறு அளவிலான கடன்களை வழங்குவதில் ஊக்கம் செலுத்தாமைக்குக் காரணமாயுள்ளது. ஆயினும், முறைசாராத் துறை கடன் தொகையின் அளவு தொடர்பாகக் கவனஞ் செலுத்துவதில்லை.
- **கடன் பெறுவதற்கு எடுக்கும் காலம்:** முறைசார்ந்த நிதியியல் துறையின் மூலம் கடன் வழங்கப்படுகின்றபோது ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பல்வேறான சட்ட வரையறைகளுக்கும், நிறுவன ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்பட்டு தொழிற்பட வேண்டி ஏற்பட்டுள்ளதனாலும், மேலும் ஒருசில சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களுடைய வினைத்திறனற்ற நிலைமைகளினாலும் கடனுக்கு விண்ணப்பிக்கின்றவர்கள் வேண்டி நிற்கின்ற கடன் தொகையை வழங்குவதற்குக் காலதாமதமாகலாம். ஆயினும், முறைசாரா நிதியியல் சந்தையில் தொழிற்படுகின்ற கடன் வழங்குநர்களுக்கு இவ்வாறான வரையறைகள் இல்லாததோடு கடன் தொகைக்கு விண்ணபித்த உடனேயே பிணைகளுடனோ, இன்றியோ கடன் தொகையை வழங்கக்கூடிய ஆற்றல் உண்டு.
- **பிணைகள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படாமை:** கிராமிய வறியவர்களை முறைசார்ந்த நிதியியல் துறையிலிருந்து தூர விலக்கி வைக்கின்ற பிரதானமானதொரு காரணி எதிர்பார்க்கின்ற கடனைப் பெற்றுக்கொள்வதற்கு முறைசார்ந்த துறை எதிர்பார்க்கும் பிணையைச் சமர்ப்பிக்க முடியாமையாகும். ஆயினும், முறைசாரா நிதியியல் துறை தனது வாடிக்கையாளரின் கடன் விண்ணப்பத்தைக் கவனத்திற் கொள்வதற்குப் பிணை என்பதைத் தடையாக எடுத்துக் கொள்ளாது.
- **உதவிச் சேவைகளை வழங்குதல்:** பயிற்சி நடவடிக்கைகளின் மூலம் வறியவர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப அறிவு, சந்தை உதவிகள் மற்றும் தலைமைத்துவப் பயிற்சிகள் போன்றவை வழங்கப்படுகின்றன.
- **ஏனைய விடயங்கள்:** முறைசாரா நிதியியல் துறையில் செயற்படுகின்ற ஒவ்வொரு கடன் வழங்குநராலும் நடைபெறுவது கடன் வழங்குதல் மட்டுமல்ல. கடன் வழங்குதல் இவர்களுடைய நோக்கங்களில் ஒன்று மட்டுமே என்பதோடு, தமது வாடிக்கையாளர்களின், குறிப்பாக வறியவர்களின் சமூக மேம்பாட்டை முன்னிட்டு மேலும் பல தொழிற்பாடுகளும் நடைபெறுகின்றன. குழு எண்ணக்கரு, சமூக உயிர்ப்பூட்டல் போன்றவற்றைப் பயன்படுத்தி வறியவர்களை ஆன்மீக ரீதியில் அபிவிருத்தி செய்தலும் நடைபெறுகின்றன.

முறைசாரா நிதியியல் துறையில் செயற்படுகின்ற பெரும்பாலான கடன் வழங்குநர்கள் தாம் வசிக்கும் பிரதேசத்துக்கு அண்மையிலிருந்து கிடைக்கின்ற கடன் விண்ணப்பங்கள் தொடர்பாகக் கூடுதலான கவனம் செலுத்துகின்றனர். ஆயினும் தொலைவில் வசிக்கும் ஒருவர் கடன் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கின்றபோதுகூட அவர் நன்றாக அறிமுகமானவர் என்பதன் காரணத்தினால் அல்லது கடன் விண்ணப்பதாரர் கடன் வழங்குநரை நன்றாக அறிமுகமல்லாதவராயிருப்பின், அறிமுகமான வேறொருவர் அறிமுகம் செய்து வைப்பதன் பேரில், இரவு பகலெனப் பாராது கடன் வேண்டி நிற்கின்றபோதே அல்லது மிகக் குறுகியதொரு காலத்தினுள் கடனை வழங்குவார்கள். இதனால் முறைசார்ந்த துறையிலிருந்து கடன் பெறுகின்றபோது முகம் கொடுக்க நேரிடுகின்ற காலதாமதத்தையும் பல்வேறான சட்ட விதிகளையும் கவனத்திற் கொள்கின்றபோது அதிகூடிய வட்டி வீதத்தின் கீழ்கூட முறைசாராத் துறையிலிருந்து கடன் பெறுதல் கிராமிய வறியவர்களுக்கு இலகுவாயுள்ளது.

இவ்வாறான பல காரணங்களினால் கிராமிய வறியவர்கள் முறைசார்ந்த துறையின் நிதியியல் வசதிகளிலிருந்து மென்மேலும் தூர விலகிச் சென்றுள்ளனர். நாம் மேலே குறிப்பிட்ட முறைசாரா நிதியியல் துறையிலிருந்து அதிகூடிய வட்டி வீதத்தின் கீழ்கூட கடன் பெறுவது தொடர்பாக கிராமிய மக்களைத் தூண்டுவதற்கும் அவர்களுடைய உள்ளத்தை ஈர்ப்பதற்கும் காரணமாயமைந்துள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு முறைசார்ந்த துறையினால்கூட தற்போது நிலவுகின்ற மரபு ரீதியான கடன் வழங்கல்களின்போது பின்பற்றப்படுகின்ற செயற்பாடுகளிலிருந்தும் சட்டத் தடைகளிலிருந்தும் விடுபட்டு கிராமிய வறியவர்களுக்குப் பொருத்தமான மாற்றுக் கடன் திட்டங்களைத் திட்டமிடுவதென்பது முடியாததொரு காரியமல்ல.

## 3. சிறு கடன்களும் சிறிய அளவிலான கருத்திடங்களின் முக்கியத்துவமும்

இலங்கையின் கிராமியத் துறையினுள் பல்வேறான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்ற அரச சார்பற்ற பல நிறுவனங்கள் உள்ளன. அநேகமாக இவ் அனைத்து அமைப்புக்களும் தமது அமைப்புக்களின் நிதியங்களின் மூலம் இன்றேல் வெளிவாரியான நிதிய மூலங்களோடு தொடர்புகொண்டு தமது அங்கத்தவர்களின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை முன்னிட்டு கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கின்றன. அவ்வாறாயினும் முறைசாரா நிதியியல் துறையில் செயற்படுகின்ற இவ் அமைப்புக்களின் செயற்பாடுகளும் அவற்றின் முன்னேற்றமும் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வது கடினமானதொரு விடயமாகும். இவ் அமைப்புக்களில் பெரும்பாலானவை சட்டரீதியான தேவைகளை நிறைவேற்றாதுள்ளனவென்பதோடு, குறைந்தபட்சம் குறிப்பிட்ட நிறுவனக் கட்டுப்கோப்பினுள் பதிவு செய்யப்படாதுள்ளமையுமே இதற்கான காரணங்களாயுள்ளன. இதனால், இந்த முறைசாராத் துறையிலிருந்து பிறக்கின்ற தரவுகள் மற்றும் தகவல்களை ஒன்று திரட்ட முடியாதுள்ளமை ஒரு விதத்தில் துர்ப்பாக்கியமாகும். ஏனென்றால், அரச நிதியியல் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றபோது கிராமியத் துறையில் வாழ்கின்ற வறியவர்களின் கடன் தேவைகள், கடன் பயன்படுத்துகை மற்றும் கடன்படுதன்மை தொடர்பான உண்மைத் தகவல்களைப் பிரயோகிக்க முடியாமையினால் வெற்றிகரமான பொருளாதார அபிவிருத்தித் திட்டமிடல்களைத் தயாரிப்பதற்கு முடியாதுள்ளதனாலாகும். அதேபோன்று அத்துறையின் உண்மைநிலை தொடர்பான தெளிவைப் பெறுவதற்கும் இதன் காரணமாக முடியாதுள்ளது.

நிலைமை இவ்வாறிருப்பினும் முறைசாராத் துறையின் கடன் மூலங்களின் மீது வறியவர்களின் உள்ளத்தை ஈர்க்கக்கூடிய ஒரு சில பண்புகள் புகுத்தப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ள வறுமை ஒழிப்புக்கான பல கடன் திட்டங்கள் முன்னேறுகின்ற நாடுகளில் பரீட்சார்த்த ரீதியில் அமுலாக்கப்பட்டுள்ளன அல்லது அமுலாக்கப்படுகின்றன. பல தசாப்தங்களாக பல்வேறான நாடுகளிலும் பல்வேறான வடிவங்களிலும் இவ்வாறான கடன் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ள போதிலும் ஆட்சியிலுள்ள அரசாங்கங்களினால் அத்திட்டங்களினுள் தமது அரசியல் நோக்கங்களும் புகுத்தப்படுவதன் காரணத்தினால் அவை குளறுபடியான நிலைமைக்கு உள்ளாகி இறுதியில் இலக்குக் குழுக்களான வறியவர்களைக் கடனாளிகளாக மாற்றி தோல்வியில் முடிவுற்ற சந்தர்ப்பங்களே அதிகமாயுள்ளன.

இவ்வாறான வறுமை ஒழிப்புக்கான வேலைத்திட்டங்களின்போது பயன்படுத்தப்பட்ட பிரதானமான உபாயம் யாதெனில், இலக்குக் குழுக்களின் வருமான வளர்ச்சியும், உற்பத்தியின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக இவர்களை முறைசார்ந்த நிதியியல் துறைக்கு ஆற்றுப்படுத்தலுமாகும். இதன்மூலம் நிதியியல் வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக, முறைசார்ந்த அல்லது முறைசாராத் துறைகளில் சிறிய அளவிலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்குத் தேவையான பின்னணியை முன்னேற்றுதலும், சமூகக் கட்டமைப்பைப் பாதுகாப்பதோடு, சுயதொழில் மட்டத்திலான தொழில்களை உருவாக்குதலும் எதிர்பார்க்கப்பட்டன.

ஆயினும், அரிதான வளங்களைப் பயன்படுத்தி சமூகப் பொறுப்பொன்றெனக் கருதி ஆரம்பிக்கப்படுகின்ற இவ்வாறான வேலைத்திட்டங்களினூடாக சிறப்பான நீண்டகாலப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியாதென்றே, இவ்வேலைத் திட்டங்கள் தொடர்பாக விமர்சன ரீதியிலான கருத்துக்களைத் தெரிவிக்கின்றவர்கள் கூறுகின்றனர். இவ்வாறான வேலைத்திட்டங்களின் கீழ் சிறு கடன் வசதிகளுடன் ஆரம்பிக்கப்படுகின்ற சிறிய அளவிலான தொழில் முயற்சிகளில் ஏற்படக்கூடிய வளர்ச்சி வரையறுக்கப்பட்டதாயுள்ளதோடு, இக் காரணத்தினால் வறிய மக்களுக்கு வாழ்வதற்குப் போதியளவு வருமானமொன்று கிடைக்காதென்பதாலேயே இவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். இக் காரணத்தினால் தொடர்ச்சியாகவே வறியவர்கள் இவ்வாறான வேலைத்திட்டங்களின் மீது தங்கிவாழ்கின்றனரெனவும் அதன் காரணமாக இவ் வேலைத்திட்டங்களும் இவற்றுக்கு நிதியுதவிகளை, வசதிகளை வழங்குகின்ற நிறுவனங்களின் மீது தங்கியிருக்கின்றனவென்றும் இவர்கள் கூறுகின்றனர். அதேபோன்று, இவ்வாறான வேலைத்திட்டங்களுக்கு வறியவர்களால் இலகுவாக அணுகமுடியுமாயுள்ளதோடு, அவர்களுக்குக் கடன் பெற்றுக் கொள்வதிலுள்ள பிரச்சினைகளைக் களைந்தெறியக் கூடியதாயுள்ளதென்பதும் மேலும் பல விமர்சகர்களுடைய கருத்தாகும்.

ஆயினும், இக் கடன் திட்டத்தை விமர்சனக் கண்ணோட்டத்துடன் நோக்குகின்றபோது, சுயதொழில் மட்டத்திலான தொழிலொன்றையோ, வருமானம் ஈட்டித் தருகின்ற வழியொன்றையோ உருவாக்கிக் கொள்வதற்காக ஏற்க வேண்டி வருகின்ற செலவினம் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளதென்பது தெளிவாகக் காணக்கூடியதாயுள்ளதொரு விடயமாகும்.

ஆயினும், தேசிய அபிவிருத்தித் திட்டமிடலின் கீழ் உருவாக்கப்படுகின்ற சுதந்திர வர்த்தக வலயமொன்றில் அல்லது தொழிற் பேட்டையொன்றில் ஒரு தொழிலை உருவாக்குவதற்கு பெரும்பாலும் இலட்சக் கணக்கான ரூபாக்கள் செலவழிக்கப்படுகின்றன. அடித்தள வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கருத்திட்டச் செலவினம் போன்ற பல்வேறு செலவுகள் உள்ளடங்குவதாலேயே அவ்வாறு நடைபெறுகின்றது. அநேகமாக இவ்வாறான பாரிய கருத்திட்டங்களுக்காக வெளிநாட்டுக் கடன்கள் போன்றவை பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இதனால் குறிப்பிட்ட அரசுகளால் பல வருடங்களுக்கு இக் கடன்களையும் அதற்கான வட்டி மற்றும் சேவைக் கட்டணங்களையும் செலுத்த வேண்டியேற்படுகின்றது. இங்கு இப் பாரிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியை உழைத்தல், தொழில் பிறப்பாக்கம் மற்றும் அடித்தள வசதிகளின் மேம்பாடு போன்ற பல்துறைக் கருமங்கள் பலவும் நடைபெறுகின்றன. ஆயினும், கிராமிய மட்டத்திலான வறியவரொருவருக்குச் சிறு கடன் தொகையொன்றை வழங்குவதன் மூலம் மேற்குறிப்பிட்ட பல்துறைக் கருமங்கள் அனைத்தையும் எதிர்பார்க்கமுடியாது. ஆதலால் சிறிய அளவிலான கருத்திட்டங்களை ஆரம்பிப்பதால் தேசிய அபிவிருத்தியில் பெரும் தாக்கமொன்று ஏற்படாதபோதிலும், குறைந்த செலவினத்துடனும், சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கத்தைக் குறைந்த மட்டத்தில் பேணுகின்ற விதத்திலும் வளர்ச்சியடையச் செய்யக் கூடியதானதொரு முக்கியமான துறையாக இருக்கும். ஆயினும், இக் கருமங்களை ஈடேற்றுகின்றபோது, இவை அரசாங்கத்தினால் மட்டும் செய்யக்கூடியவையல்ல. இதற்கு அரச சார்பற்ற துறையின் தலையீடும் மிக அவசியமாகின்றது. அரச சார்பற்ற துறையின் பங்களிப்புடன் அரச துறையினால் வறுமை ஒழிப்புக்காக ஆரம்பிக்கப்பட்ட பல வேலைத்திட்டங்கள் தற்போதுகூட செயற்படுத்தப்படுகின்றன. இந்த ஒரு வேலைத்திட்டத்தின் அமுலாக்கம் மற்றும் முன்னேற்றம் தொடர்பாகக் கலந்துரையாடுவதன் மூலம் சிறுகடன் திட்டங்களை வறுமை ஒழிப்புக்காக எவ்வாறு பயன்படுத்தலாமென்பதைப் பற்றிய விடயங்களைக் கண்டறியலாம். எதிர்வரும் கட்டுரைத் தொடரொன்றின் மூலம் இவ்வாறான கருத்திட்டமொன்று தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

# கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை சீர்திருத்தம்

**ரோஸ் மெட்டில்டா சிறிவர்தன**
பணிப்பாளர்,
கொடுப்பனவுகள், தீர்ப்பனவுகள் திணைக்களம்

**நாணயக்** கொடுக்கல் வாங்கல்கள் இயந்திரமூலம் நடைபெறுகின்றதென மக்கள் நினைப்பதன் காரணத்தினால், கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமைகளிலுள்ள பாதுகாப்புத் தன்மை அல்லது வினைத்திறன் மக்களுடைய கவனத்திற்கு எப்போதும் உள்ளாகின்றதொரு விடயமாயிருக்காது. ஆயினும், வெளிநாடுகளில் வங்கிகள் முறிவடைந்த சந்தர்ப்பங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் பூராவும் பரவிச்சென்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுப் பிரச்சினை முறைமையியல் ரீதியான இடர்நேர்வுகள், எல்லைகளைக் கடந்து ஏனைய நாடுகளுக்கும் பரவிச் செல்கின்றன என்பதற்குச் சான்றாக உள்ளது. நிதியியல் மற்றும் தொடர்பாடல் துறைகளின் புதிய கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் நிதியியல் உலகமயமாக்கல் (Globalization) ஆகியவை காரணமாக உள்நாட்டு மற்றும் சர்வதேச கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமைகளுக்கிடையில் குறிப்பிடத்தக்கதொரு தொடர்பு உள்ளதனால் இவ்வாறான முறைமையியல் ரீதியான இடர்நேர்வுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இன்று அதிகமாயுள்ளன. ஆதலால், அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தைப் பலத்துடன் எதிர்கொள்வதற்கு ஆற்றலுள்ள கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை ஆரம்பித்து முகாமை செய்தல் தனியார்துறை நிதி நிறுவனங்களைப் போன்றே மத்திய வங்கியும் இன்று எதிர்நோக்கியுள்ள பொதுவானதொரு சவாலாக உள்ளது. பத்து நாடுகளின் குழுவுக்கு (Group of 10 Countries) உரித்தாயுள்ள மத்திய வங்கிகளால் பல்வேறான நாணயங்களின் மூலம் நடைபெறுகின்ற தேறிய தீர்ப்பனவு முறைமைகளுக்காக (Multi Currency Netting Schemes) இருக்க வேண்டிய குறைந்தபட்சத் தரக்கட்டளைகள், 'லம்பாலூசி தரக்கட்டளைகள்' (Lamfalussy Standards) என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத் தரக்கட்டளைகள் உள்நாட்டுத் தீர்ப்பனவு முறைமைகளுக்குக் கூட பொருத்தமாயுள்ளதென்று இன்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்த 'லம்பாலூசி தரக்கட்டளைகளுக்கு' மேலும் பல கோட்பாடுகள் சேர்க்கப்பட்டு, பிரதானமான கொடுக்கல் வாங்கல் முறைமைகளால் நிறைவேற்றப்பட வேண்டிய 10 பிரதானமான கோட்பாடுகள் (Core Principles) சர்வதேச தீர்ப்பனவு வங்கியினால் (Bank of International Settleement) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, பெரும்பாலான முன்னேறிய நாடுகளைப் போன்றே ஜப்பான், கொரியா. ஹொங்கொங் போன்ற ஆசிய நாடுகளிலும் காசோலைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் நடைபெறுகின்ற நேரடியான கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்கின்ற சிறிய அளவிலான தனியார் தீர்ப்பனவு முறைமைகளும் இப் பிரதானமான கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமைகளுக்கு ஏற்புடையதான கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளன. இக் கோட்பாடுகளுக்கு ஏற்ப இத் தீர்ப்பனவு முறைமைகளில் பங்கேற்கின்ற நிதி நிறுவனங்களில் ஆகக் கூடுதலான கொடுப்பனவைச் (பற்று மீதி) செய்யவேண்டிய நிறுவனம் தமது கொடுப்பனவைச் செலுத்தத் தவறுமாயின், அதனை எதிர்கொள்வதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாகும் பொருட்டு, பங்கேற்கின்ற வங்கிகளின் தேறிய பற்று மீதிகள் தொடர்பான எல்லைகளைப் (Net Debit cops) பேணி வருதல் மற்றும் அவ்வாறான நிதித் தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குப் போதியளவு பிணையங்களை வங்கிகள் ஒதுக்கொன்றாக வைத்திருத்தல் போன்ற இடர்நேர்வுகளைக் குறைக்கின்ற முறைகளைப் பிரயோகிப்பதற்கு முன்வந்துள்ளன. தனியார் துறையும் அதேபோன்று மத்திய வங்கியும் நிருவகிக்கின்ற கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் மேம்படுத்தப்படுதல் வேண்டுமென்பது இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆதலால், பெரும்பாலான நாடுகளின் மத்திய வங்கிகள் அவர்களது நடைமுறைக் கணக்குத் தீர்ப்பனவு முறைமைகளுக்காக அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையை (Real Time Gross Settlement System) அறிமுகப்படுத்தி வைப்பதற்கு முனைந்துள்ளன.

இலங்கை மத்திய வங்கி நடைமுறைக் கணக்குத் தீர்ப்பனவு முறைமையில் தற்போது கொடுப்பனவுகள் நாளின் இறுதியிலேயே தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. பங்கேற்கின்ற ஒவ்வொரு வங்கிக்கும் ஏனைய நிதி நிறுவனங்களிலிருந்து கிடைக்கவேண்டிய பணத் தொகைக்கும் மற்றும் ஒவ்வொரு நிறுவனமும் ஏனைய நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய பணத் தொகைக்கும் இடையிலான வித்தியாசத்தைக் கணிப்பீடு செய்ததன் பின்னர் உள்ள தேறிய பற்று அல்லது வரவு நிலுவை தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. ஆதலால், ஏதேனுமொரு நிதி நிறுவனம் தனது கணக்கிலிருந்து கொடுப்பனவொன்றைச் செய்யும்படி மத்திய வங்கிக்கு அறிவுறுத்தலொன்றைச் செய்த கணத்திலிருந்து அனைத்து பங்கேற்கின்ற நிதி நிறுவனங்களினதும் தேறிய நிலுவைகள் நடைமுறைக் கணக்குகளிலிருந்து தீர்ப்பனவு செய்யப்படும் வரையுள்ள காலதாமதத்தில் தமது வரவுகள் கிடைக்காமை தொடர்பான ஏதேனுமொரு நிதியியல் இடர்நேர்வை எதிர்நோக்குகின்றன. இக் காலகட்டத்தினுள் கொடுப்பனவைச் செய்யவேண்டிய வங்கி முறிவடைவதற்கு வாய்ப்புள்ளமையே இதற்கான காரணமாகும். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் நாளின் இறுதியில் நடைபெறுகின்ற தீர்ப்பனவு முறைமை சிலவேளை தற்காலிகமாக நிறுத்தப்படலாம். ஏதேனுமொரு வங்கி தமக்கு இந்த முறிவடைந்த வங்கியிலிருந்து பணம் கிடைக்குமென்ற எதிர்பார்ப்புடன் ஏதேனுமொரு கொடுப்பனவை மேலுமொரு மூன்றாம் தரப்பினருக்குச் செய்திருப்பின் தற்காலிக நிதி நெருக்கடிக்கு முகம் கொடுக்கவேண்டி வரலாம். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில், அந் நிதி நிறுவனத்துக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அதிகூடிய வட்டிக்கு அவசரமாகக் கடன் பெற்றுக் கொள்வதற்கோ, இன்றேல் தமது நிதியியல் சொத்தொன்றை நட்டத்துக்கு விற்பனை செய்வதற்கோ நேரிடலாம். ஆயினும், அவ் வங்கிக்கு அவசரமாகப் பணத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய அவ்வாறானதொரு வழி இல்லாதிருப்பின் முறிவடைந்த வங்கியைப் போன்றே அவ் வங்கியும் கொடுப்பனவைச் செய்யும் வசதியின்மைக்கு ஆளாகலாம். இவ்வாறானதொரு நிலைமை சில சந்தர்ப்பங்களில் முழுப் பொருளாதாரம் பூராவும்

பரவிச் செல்லக்கூடிய கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமை நெருக்கடிவரை வளர்ச்சியடைவதற்கும் வாய்ப்புள்ளது.

நியதி ஒதுக்குகளில் நூற்றுக்குத் 90 வீதத்துக்குக் குறையாததொரு தொகையைத் தமது கணக்குகளில் நாளாந்தம் வைத்திருக்கும்படி, மத்திய வங்கி பங்கேற்கின்ற நிதி நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்குவதன் மூலமும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் மூலமும் குறுகியகாலத் திரவத்தன்மைத் தேவைப்பாட்டை வழங்குவதன் ஊடாக மத்திய வங்கி இக் கொடுப்பனவு, தீர்ப்பனவுக்காகப் போதியளவு நிதித் தொகையொன்றை நடைமுறைக் கணக்குத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள கணக்குகளில் வைத்திருப்பதை உறுதிசெய்வதற்கு நடவடிக்கையெடுத்த போதிலும், ஏதேனுமொரு வங்கிக் கணக்கின் நிலுவைகள் போதியளவு இல்லாதவிடத்து அவ்வங்கியின் கொடுப்பனவு அறிவுறுத்தலின் பிரகாரம் கொடுப்பனவைக் கட்டாயம் செய்தாக வேண்டுமென்ற கடப்பாடு மத்திய வங்கிக்குக் கிடையாது. வங்கியொன்று ஏதேனுமொரு விதத்தில் இவ்வாறான கஷ்ட நிலையை எதிர்நோக்கியுள்ளபோது, கொடுப்பனவு, தீர்ப்பனவுச் செயற்பாட்டை நாளின் இறுதியில் எவ்விதத் தடைகளுமின்றித் தீர்ப்பனவு செய்யும் பொருட்டு வங்கிகளாலும் முதனிலை வணிகர்களாலும் கூட்டாக உடன்பட்ட வேலைத்திட்டமொன்று தற்போது கிடையாது. ஆதலால், முறைமை ரீதியிலான பெறுமதியைக் கொண்ட நடைமுறைக் கணக்கு முறைமையை வழிப்படுத்துபவரென்ற ரீதியில் மத்திய வங்கியும் ஏதேனுமொரு இடர்நேர்வை எதிர்கொள்கின்றது. ஆதலால், மத்திய வங்கி 2001 ஆம் ஆண்டில் ஆரம்பித்த தனது நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தில் கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமைகளைச் சீர்திருத்தும் பொருட்டு பின்வரும் புதிய முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளது.

(அ) பாரிய பெறுமதிகளைக் கொண்ட கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாகக் கிடைத்த உடனேயே தீர்ப்பனவு செய்யப்படுகின்ற அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை (Real Time Gross Settlement System).

(ஆ) பத்திரங்கள் அற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறையும் பிணையங்களின் மத்திய வைப்பு முறையும். இது அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறையுடன் ஒருங்கிணைக்கப்படுவதன் மூலம் கொடுப்பனவின் மீது பிணையங்களின் ஒப்படைப்பு அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது.

(இ) மத்திய வங்கியின் நடைமுறை மற்றும் எதிர்கால நிதியியல் தொழிற்பாடுகளை வினைத்திறனுடன் செய்வதை இலகுவாக்குவதற்கான தன்னியக்க மத்திய வங்கிப் பொதுப்பேரேட்டு முறை.

இந் நவீனமயப்படுத்தல் வேலைத் திட்டத்துக்குத் தேவையான நிதியியல் வளங்கள் உலக வங்கியினாலும் சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையினாலும் வழங்கப்பட்டுள்ளன. மத்திய வங்கி இவ்வாண்டின் பெப்ருவரி மாதத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பவு, தீர்ப்பனவு முறைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விலைமனுக்களைக் கோரியதோடு, அதே நேர மொத்த தீர்ப்பனவு முறையையும் பத்திரங்கள் அற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறையையும் வழங்குகின்ற விலைமனு இலங்கையின் ஜஸ்ட இன் டைம் கம்பனியுடன் தொடர்புடைய ஐக்கிய இராச்சியத்தின் லொஜிகா கம்பனிக்கு வழங்கப்பட்டது. தன்னியக்கப் பொதுப் பேரேட்டு முறையை வழங்குகின்ற விலை மனு அமெரிக்காவின் ஒரேக்கல் கம்பனியின் இலங்கை முகவரான டீ.எம்.எஸ். கம்பனிக்கு வழங்கப்பட்டது. இக் கம்பனிகள் இவ்வாண்டில் நவம்பர் மாதத்தின் ஆரம்பத்தில் இம் முறைமைகளைக் கட்டியெழுப்புகின்ற வேலைகளை ஆரம்பிப்பார்கள். இதன்படி, இம்முறைமைகள் 2003 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் மாதத்தில் செயற்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை (Real Time Gross Settlement System - RTGS)

இப் புதிய அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையை, ரூபாக்களின் மூலம் நடைபெறுகின்ற பாரிய பெறுமதிகளைக் கொண்ட கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக அறிமுகப் படுத்தப்படுகின்ற மத்திய வங்கிக்குரியதும் மத்திய வங்கியினால் வழிப்படுத்தப் படுவதுமான இலங்கையின் மிகப் பெரியதும் அதேபோன்று பிரதானமானதுமான கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமையெனக் கூறலாம். தற்போது மத்திய வங்கியின் நடைமுறைக் கணக்குத் தீர்ப்பனவு முறைமையின் கொடுப்பனவு, தீர்ப்பனவுக்காகப் பங்கேற்கின்ற அனைத்து வணிக வங்கிகளும் (23) மற்றும் முதனிலை வணிகர்களும் (8) இம் முறைமையினுள் தமது கொடுப்பனவு, தீர்ப்பனவுகளின் பொருட்டு பங்கேற்பார்கள். இதன்படி பங்கேற்கின்ற நிறுவனங்களுக்குக் காசோலை போன்ற கொடுப்பனவுக் கருவியொன்றை மத்திய வங்கிக்கு அனுப்பாது தமது வங்கியிலுள்ள கணனியொன்றின் உதவியுடன் இந்த அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் தனது நடைமுறைக் கணக்குக்குப் பற்றுவைத்து வேறொரு வங்கிக்கு அல்லது முதனிலை வணிகருக்கு அல்லது மத்திய வங்கிக்குக் கொடுப்பனவைச் செய்யும்படி அறிவுறுத்தல் கொடுக்கலாம். இக் கொடுக்கல் வாங்கலைச் செய்வதற்குப் போதியளவு நிதியை அல்லது நியதி ஒதுக்கத்தை இந்நடைமுறைக் கணக்கில் வைத்திருப்பது அவசியமாகின்றது. இவ்வாறு பங்கேற்கின்ற நிறுவனமொன்றால் கொடுப்பனவொன்றைச் செய்யும்படி வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலை, மத்திய வங்கியானது அதனைப் பெற்ற உடனேயே அதாவது ஒரு சில விநாடிகளில் குறிப்பிட்ட கணக்குகளில் பற்று வரவு வைப்பதன் மூலம் தீர்ப்பனவு செய்கின்றது. இம் முறைமை மிக முன்னேறிய இலத்திரனியல் தொழில்நுட்ப முறையின் மீது செயற்படுத்தப்படுவதனால் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலையும் அதே நேரத்தில் தீர்ப்பதற்கு (Gross Settlement) முடியுமாயுள்ளது. இதன் சிறப்பியல்பு வாய்ந்த பண்பு யாதெனில், இம்முறைமையினுள் நடைபெறுகின்ற கொடுப்பனவு, தீர்ப்பனவுகள் இறுதித் தீர்ப்பனவாகக் கருதப்படுவதாகும். இதன்படி, எவரொருவருக்கும் தமது கொடுப்பனவு அறிவுறுத்தலொன்று தீர்ப்பனவு செய்யப்பட்டு முடிவடைந்ததன் பின்னர், அதனை இரத்துச் செய்யும்படி வேண்டுகோள் விடுக்க முடியாது. ஆயினும் ஏதேனுமொரு வங்கியின், முதனிலை வணிகரின் கணக்கில் போதியளவு நிதி இல்லாதுவிடின் அக்கொடுப்பனவு அறிவுறுத்தல் வரிசையில் (Queue) வைத்திருக்கப்படும். பங்கேற்கின்ற எல்லா நிறுவனங்களுக்கும் இவ்வாறு தீர்ப்பனவு செய்யப்படாதுள்ள தமது கொடுப்பனவு அறிவுறுத்தல் வரிசையைத் தமது நிறுவனத்திலுள்ள, அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் கணனியின் மூலம் பார்வையிடக்கூடியதாயுள்ளதோடு, அவ் வரிசையை நெறிப்படுத்தவும் முடியுமாயுள்ளது. ஆதலால் பங்கேற் கின்றவர்களுக்கு தமது கொடுப்பனவு அறிவுறுத்தல்களை, அதன் முக்கியத்துவத்தையும், முதலில் தீர்ப்பனவு செய்கின்ற தேவையையும் கருத்திற்கொண்டு முற்படுத்தவோ அல்லது பிற்படுத்தவோ முடியுமாயுள்ளதைப் போன்றே இரத்துச் செய்யவும் முடியுமாயுள்ளது. நடைமுறைக்கணக்கில் போதியளவு நிதி இருப்பின் இவ் வரிசையிலுள்ள கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொடர்வரிசைப்படி உடனடியாகத் தீர்ப்பனவு செய்யப்படும். அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையை முழுமையாக நோக்குகின்றபோது அதற்குக் கிடைக்கின்ற கொடுப்பனவு அறிவுறுத்தல்கள், அவை கிடைத்த தொடர்வரிசைப்படி தீர்ப்பனவு செய்யப்படும். ஏதேனுமொரு நிறுவனத்தின் கணக்கில் போதியளவு நிதி இல்லாதவிடத்து, நாளின் இறுதியில் இத் தீர்ப்பனவு செய்யப்படாதுள்ள கொடுப்பனவு அறிவித்தல் வரிசைகளிலுள்ள அனைத்துக் கொடுக்கல் வாங்கல் அறிவுறுத்தல்களையும் நெறிப் படுத்தலாம். ஒரு வங்கி தற்காலிக நிதிப் பற்றாக்குறையை எதிர்நோக்க வேண்டி வருமெனில், தம்மிடமுள்ள அரச பிணையங்களை ஒப்படைத்து நாளுக்கிடையிலான

திரவத்தன்மை வசதியின் (Intraday Liquidity Facility) மூலம் நிதியைப் பெற்றுக் கொள்ளலாம். இதன்கீழ் பெறப்படும் நிதி அதே நாளில் கொடுக்கல் வாங்கல் நேரம் முடிவடைவதற்கு முன்னர் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்.

திடீரென வங்கியொன்று முறிவடையுமெனில், அதனால் இவ்வாறான அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் வரையறுக்கப்பட்டதொரு தாக்கத்தையே ஏற்படுத்த முடியுமாயிருக்கும். கணக்குகளில் பணம் இருப்பின் மாத்திரம், கொடுக்கல் வாங்கல் தொடர்பான கொடுப்பனவு அறிவுறுத்தல்களை இப் புதிய தீர்ப்பனவு முறைமை பெற்ற உடனேயே எவ்விதக் காலதாமதமும் இன்றித் தீர்ப்பனவு செய்வதே இதற்கான காரணமாகும். இதனால் தற்போதுள்ள நாளின் இறுதியில் தீர்ப்பனவு நடைபெறுகின்ற மத்திய வங்கி நடைமுறைக் கணக்கு முறைமையைப் போலன்றி, புதிய அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழ் அவ்வாறானதொரு சந்தர்ப்பத்திலாயினும், தற்காலிகமாகவாவது கொடுப்பனவு, தீர்ப்பனவுத் தொழிற்பாடுகளை நிறுத்த வேண்டி வராது. இந்த அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் மூலம் பின்வரும் பிரதானமான சேவைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது.

- அதே நேர பண ஒப்படைப்புக்கள்
- வர்த்தக வங்கிகளுக்கு/முதனிலை வணிகர்களுக்கு மத்திய வங்கியில் தமது நடைமுறைக் கணக்குகளிலுள்ள நிலுவைகளை, எந்தவொரு வேலை நேரத்திலும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தமது கணனியின் ஊடாகக் கண்டறிய முடியமாதல்.
- கொடுப்பனவு, தீர்ப்பனவு வசதியீனங்களைத் தவிர்க்கும்பொருட்டு, அதில் பங்கேற்கின்றவர்களுக்கு நாளுக்கிடையிலான திரவத்தன்மை வசதிகளை வழங்குதல்.
- வங்கிகளுக்கு/முதனிலை வணிகர்களுக்கு தமது கொடுப்பனவு வரிசைகளை முகாமை செய்ய முடியுமாதல்.
- தமது கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவல் சேவைகளை வழங்குதல்.
- பங்குபற்றும் நிறுவனங்களுக்கு மிக இலகுவாக இம் முறைமையினுள் தொழிற்படுவதற்கு முடியுமாதல்.
- சர்வதேசத் தீர்ப்பனவு வங்கியால் (Bank of International) ஏற்றுக்கொள்ளப்படுகின்ற உயர்தரக் கட்டளைகளைக் கொண்ட தீர்ப்பனவு முறைமை வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

இந்த அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறையினூடாகப் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தீர்ப்பனவு செய்யப்படும்.

- அழைப்புப் பணச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்கள்.
- லங்கா க்ளியர் (தனியார்) கம்பனியால் வழிப்படுத்தப்படுகின்ற காசோலைத் தீர்ப்பனவுகள் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகளின் சமப்படுத்தல் நிலுவைகளைத் தீர்ப்பனவு செய்தல்.
- அரசாங்க முதனிலை மற்றும் இரண்டாம் நிலை பிணையங்கள் சந்தையின் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள்.
- வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய ரூபாக்களின் மூலம் நடைபெறுகின்ற கொடுப்பனவுகள், மற்றும்
- வங்கிகள் தமது வாடிக்கையாளர்கள் சார்பாகச் செய்கின்ற அவசரப் பண ஒப்படைப்புகள்.

இந்த அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையை அறிமுகம் செய்து வைப்பதன் மூலம் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் இடர்நேர்வுகள் குறைந்து வினைத்திறன் அதிகரிக்கலாமென எதிர் பார்க்கப்படுகின்றது. அதேபோன்று இதன் மூலம் எதிர்காலத்தில் உலகில் மிக வேகமாக முன்னேறுகின்ற கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமைகளைப் போன்றே இலங்கையின் கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமைகளுக்குத் தொழிற்படுவதற்கான பலம்பொருந்திய அடித்தளமொன்றையும் அதேபோன்று இவ்வாறான மேம்படுத்தப்பட்ட பண்புகளைக் கொண்ட தீர்ப்பனவு முறைமைகளுள்ள ஏனைய நாடுகளுடன் ஒன்றுசேர்ந்து கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யக்கூடிய ஆற்றலையும், இலங்கைக்குப் பெற்றுக்கொள்ள முடியுமாயிருக்கும்.

இதனடிப்படையில், இதில் பங்கேற்கின்ற நிறுவனங்களுக்கு தமது கொடுக்கல் வாங்கல்களையும் தீர்ப்பனவுகளையும் அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்யும் பொருட்டு வடிவமைய வேண்டி ஏற்படுகிறது. இதற்காக வங்கியாளர்களைப் பயிற்றுவிக்கின்ற செயலமர்வுகள் இலங்கை மத்திய வங்கியால் ஏற்கெனவே ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

### பத்திரங்களற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறைமை (Scripless Securities Settlement System)

பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் கீழ், பிணையங்களின் விற்பனை அல்லது கொள்வனவு தழுவிய பிணையங்கள் பரிமாற்றமொன்று நடைபெறுகின்றபோது, அதற்குச் சமகாலத்திலேயே உடனடியாக அதற்குரிய பணம் கிடைக்காதிருத்தலோ அல்லது பணம் செலுத்தப்பட்டதன் பின்னர் அதற்குரிய பிணையம் கிடைக்காதிருத்தலோ நடைபெறாது. தற்போது அரச பிணையங்கள் சந்தையில் அரச திறைசேரி உண்டியல்களும் முறிகளும் விற்பனை செய்யப்படுகின்றபோது அந்தக் குறிப்பிட்ட உண்டியல்களைப் புறக்குறிப்பிட்டு எடுத்து வந்து ஒப்படைக்க வேண்டி வருகின்றது. ஆயினும், இப்புதிய பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் கீழ் பிணையங்கள் (Scripless) பத்திரங்களற்ற இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக தீர்ப்பனவு செய்யப்படுவதோடு, இதனை இலகுபடுத்தும் பொருட்டு பத்திரங்களற்ற பிணையங்களின் பெறுமதி, முதிர்ச்சியடையும் திகதி, அவற்றின் உரிமையாளர்கள் போன்ற விபரங்கள் குறிப்பிடப்பட்ட பிணையங்களின் மத்திய வைப்பு முறைமை (Central Depositing System) அறிமுகப்படுத்தப்படும். அனைத்துத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் கொடுக்கல் வாங்கல்களின் போது நடைபெறுகின்ற பிணையங்களின் உரிமை மாற்றம், இப் பிணையங்களின் மத்திய வைப்பு முறைமையில் பதியப்படும். பத்திரங்களற்ற பிணையங்களின் முறைமையும் மொத்தத் தீர்ப்பனவு முறைமையொன்றாதலால், அதன் மிருதுவான செயற்பாட்டிற்காக அதில் பங்கேற்கின்ற வர்த்தக வங்கிகளும் அதேபோன்று முதனிலை வணிகர்களும் தமது கணக்குகளில் போதியளவு பிணையங்களை வைத்திருத்தல் அவசியமாகின்றது. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை, அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையுடன் சமகாலத்தில் செயற்படுவதனால் பிணையங்கள் சந்தையின் கொடுக்கல் வாங்கல்கள் அதே நேரத்தில் வினைத்திறனுடன் நடைபெறும். இப் புதிய பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் மூலம் அரச பிணையங்கள் சந்தையின் வினைத்திறனும் அதேபோன்று முதலீடும் அதிகரித்து, இடர்நேர்வுகள் குறைவடைவதன் மூலம் துரித வளர்ச்சியொன்றுக்குக் காரணமாயமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு நிதித் தீர்ப்பனவு முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறனுக்கு மேலதிகமாக அரச பிணையங்கள் சந்தையின் தீர்ப்பனவுகளின் பாதுகாப்பையும் வினைத்திறனையும் ஏற்படுத்துவதில் ஏனைய நாடுகளின் கவனமும் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான அதே நேர மொத்தத் தீர்ப்பனவு அல்லது பிணையங்கள் தீர்ப்பனவு முறைமைகளினால் மாத்திரம் கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமைகளிலுள்ள அனைத்து இடர்நேர்வுகளையும் நீக்க முடியாது. இதற்காக தனியார் துறையினால் வழிப்படுத்தப்படுகின்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை வழிப்படுத்துகின்றவர்களும் அத்துடன் பங்கேற்கின்றவர்களும் மத்திய வங்கியும் கூட்டாக இணைந்து இடர்நேர்வுகளை இனங்கண்டு அவற்றை முடியுமானவரை குறைப்பதற்கு

(17ம் பக்கத்திற்கு....)

**மத்திய வங்கி முறையின்...**
(2ம் பக்கத்திலிருந்து)

### இங்கிலாந்து வங்கி (Bank of England)

இங்கிலாந்து அரசுக்கு முற்பணங்களை வழங்குதலும் அது சார்பாக நாணயங்களை வெளியிடுவதற்குமான உரிமையை ஒப்படைத்தல் தொடர்பான பாராளுமன்றச் சட்டமொன்றுக்கு ஏற்ப 1694 இல் இங்கிலாந்து மத்திய வங்கி நிறுவப்பட்டது. நாணயங்களை வெளியிடுகின்ற உரிமை பல்வேறான வரையறைகளுக்குட்பட்டிருந்த போதிலும், அரசுக்குக் கடன் முற்பணங்களை வழங்குகின்ற உரிமை புதுப்பிக்கப்பட்டமை மற்றும் நீடிக்கப்பட்டமையின் காரணமாக இங்கிலாந்து வங்கி படிப்படியாக மென்மேலும் சட்ட ரீதியாக நாணயத்தை வெளியிடும் உரிமையைப் பெற்றுக்கொண்டது. இதற்கிணங்க, படிப்படியாக இங்கிலாந்து மத்திய வங்கி பகுதிவாரியாக நாணயத்தை வெளியிடும் ஏகபோக உரிமையை, அப்போது இவ்வுரிமை ஒப்படைக்கப்பட்டிருந்த ஏனைய வங்கிகளிடமிருந்து உரித்தாக்கிக் கொண்டது. 1826 இல் லண்டன் நகரத்திலிருந்து 65 மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள வங்கிகளுக்கும் நாணயத்தை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டபோதிலும், 1833 இல் ஆக்கப்பட்ட சட்டமொன்றின் மூலம் இங்கிலாந்து மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், 1844 இல் அங்கீகரிக்கப்பட்ட வங்கிச் சட்டத்தின் மூலம் நாணயத்தை வெளியிட்ட ஏனைய வங்கிகளின் வெளியீடுகள் மட்டுப்படுத்தப்பட்டன. இங்கிலாந்து வங்கிக்கு அதன் கிளைகளை இங்கிலாந்தின் ஏனைய பகுதிகளில் ஆரம்பிப்பதற்கான அனுமதி 1826 இல் வழங்கப்பட்டது.

நாணயத்தை வெளியிடுதல் தொடர்பான பகுதிவாரியான ஏகபோக உரிமைக்கு மேலதிகமாக, அரச வங்கியாளரும் முகவராண்மையும் என்ற ரீதியில் இங்கிலாந்து வங்கியின் தொழிற்பாடுகள் விரிவடைந்ததன் காரணமாக அதற்கு படிப்படியாக ஏனைய வங்கிகளை மேலோங்கிச் செல்லக்கூடிய சிறப்பானதொரு வாய்ப்புக் கிடைத்தது. மேலும், 18வது நூற்றாண்டில் பெரும்பாலான தனியார் வங்கிகள், இங்கிலாந்து வங்கியுடன் கணக்குகளைப் பேணி வருவதன் மூலம், அப்போது அரச முகவராண்மையாகவிருந்த இங்கிலாந்து வங்கிக்கிருந்த நம்பகத்தன்மை மற்றும் சிறப்புரிமைகளுடன் கூட்டுச் சேர்வதால் அனுகூலங்களைப் பெறக்கூடியதாயிருந்த வாய்ப்புகள் இனங்காணப்பட்டன. இதன்படி இத்தனியார் வங்கிகள் இங்கிலாந்து வங்கியில் பாரிய அளவிலான கணக்குகளைப் பேணி வருகின்றதும் அதேபோன்று அதிகூடிய நிலுவைகளைப் பேணி வருகின்றதுமான போக்குகள் வளர்ச்சியடைந்தன. அதேபோன்று இக்காலகட்டத்தில் பெருமளவு கூட்டுப் பங்குத் தொகுதி வங்கிகள் இங்கிலாந்து முழுவதும் உருவானதைத் தொடர்ந்து அவ் வங்கிகளின் ஒதுக்கங்களினதும் நாட்டின் தங்க ஒதுக்கங்களினதும் நம்பிக்கைப் பொறுப்பு வங்கியாக இங்கிலாந்து வங்கி மாறியது. ஏனைய வங்கிகளும் இங்கிலாந்து வங்கியில் பாரிய அளவில் நிலுவைகளைப் பேணி வருதல் 1854 ஆம் ஆண்டாகும்போது வளர்ச்சியடைந்தது. இதன் பெறுபேறாக 1854 ஆம் ஆண்டாகும்போது இங்கிலாந்து வங்கி படிப்படியாகத் தீர்ப்பனவு வங்கியாகவும் மாறியது.

இறுதிக் கடன் கொடுப்பவராகச் செயலாற்றுகின்ற நிலைமையை ஏற்றுக்கொள்ளல் இங்கிலாந்து வங்கி அபிவிருத்தியின் அடுத்த கட்டமாயிருந்தது. அதன்படி நாணயத்தை வெளியிடுதலும் பேணி வருதலும் மாத்திரமன்றி பொருளாதாரத்தின் கடன் முறைமையும் ஒழுங்காகப் பேணி வருகின்ற பொறுப்பும் இங்கிலாந்து வங்கிக்குக் கிடைத்தது. 1847. 1857 மற்றும் 1866 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட நிதியியல் பிரச்சினைகள், நாணயத்துக்கும் கடனுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பைப் பேணி வருவதற்குத் தேவையான கவனத்தை இங்கிலாந்து வங்கிக்குப் பெற்றுக் கொடுத்தது.

---

**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு...**
(16ம் பக்கத்திலிருந்து)

நடவடிக்கையெடுத்தல் அவசியமாகும். முன்னர் குறிப்பிட்டதைப் போன்று முழு நிதி முறைமையும் பொதுமக்கள் நம்பிக்கையின் மீது தங்கியுள்ளது. அவ்வாறான நிதி முறைமை தடைகளெதுமின்றி நிலையாகச் செயற்படுவதற்கு நிதி நிறுவனங்களுக்கு, தீர்ப்பனவு இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துதல் உட்பட ஒழுங்கு முறையான நிதி முகாமைத்துவம் தொடர்பான முக்கியமான கடமைப்பொறுப்பொன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடன் மீளச் செலுத்தப்படாமை தொடர்பான இடர்நேர்வைப் போலன்றி, கொடுப்பனவொன்று உரிய விதத்தில் தீர்ப்பனவு செய்யப்படாமை தொடர்பான இடர்நேர்வொன்று உருவாகியுள்ளபோது, அதன் பாதகமான தாக்கங்களை இனங்காண்பதன் மூலம் மாத்திரம் அதற்குத் தீர்வு காண்பது கடினமாகும். அவ்வாறான இடர்நேர்வு முகாமைத்துவத் திறற்காக கொடுப்பனவு, தீர்ப்பனவுச் செயற்பாடு நடைபெறுகின்ற முறைமையின் தொழில்நுட்பப் பண்புகளைச் சிறப்பாக இனங்காண்பதற்கான ஆற்றல் இருப்பது அவசியமாகும். அவ்வாறான ஆற்றலைத் திடீரென வளர்க்க முடியாது. ஆதலால், அவ்வாறான இடர்நேர்வுகளை முன்கூட்டியே இனங்காண்கின்ற முறையொன்று இருப்பதைப் போன்றே இவ்வாறான இடர்நேர்வுக் கட்டுப்பாட்டுக்கு, வினைத்திறனுடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்துதல் அவசியமாகும். ஆதலால் முன்னேறிய பெரும்பாலான நாடுகளின் நிதி நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்பானதும் அதேபோன்று வினைத்திறனுடன் கூடியதுமான தீர்ப்பனவுச் சேவைகளை உருவாக்கும் பொருட்டு உள்ளக இடர்நேர்வு முகாமைத்துவ முறைகளை மேம்படுத்துவதைக் காண்கிறோம்.

புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் தொழில்நுட்ப முறைகள் தொடர்ந்து முன்னேற்றமடைவதன் காரணத்தினால், கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமைகளை அபிவிருத்தி செய்கின்ற நோக்கங்களுக்கு திட்டவட்டமானதொரு இறுதி கிடையாது. நிதியியல் உலகமயமாக்கலின் காரணமாக ஒரு நாட்டினுள் நடைபெறுகின்ற தீர்ப்பனவுப் பிரச்சினை ஏனைய நாடுகளை நோக்கியும் பாவிச் செல்லும் வாய்ப்புள்ளது. ஆதலால் இலங்கை மத்தியவங்கியும் உலகளாவிய அடிப்படையில் ஏனைய உள்நாட்டு நிதி நிறுவனங்களைப் போன்றே ஏனைய நாடுகளின் மத்திய வங்கிகளுடன் ஒன்றுசேர்ந்து கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமைகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கையெடுத்தல் முக்கியமானதாயுள்ளது.

ஆயினும், முழுக் கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒருசில இடர்நேர்வுகளைத் தவிர்ப்பது கடினமாகும். அதற்காக மத்திய வங்கி தனது முன்னோடிச் செயற்பாடு அல்லது மேற்பார்வைச் செயற்பாட்டின் ஊடாக, நிதிநிறுவனங்களின் செயற்பாடுகளிலும் மற்றும் கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமையிலுள்ள இடர்நேர்வுகளை இனங்காணுதல், தடைகளெதுவுமின்றி கொடுக்கல் வாங்கல் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு முக்கியமானதாயிருக்கும். ஆதலால், இலங்கை மத்திய வங்கி நிதியியல் முறைமையின் திருப்திகரமான செயற்பாட்டை உறுதி செய்யும்பொருட்டு கொடுப்பனவு, தீர்ப்பனவு முறைமைகளின் பாதுகாப்பையும் வினைத்திறனையும் மேம்படுத்தும் பணியில் இன்றும் நாளையும் ஈடுபட்டிருக்கும்.

அப்போதைய வங்கிச் சட்டத்துக்கு ஏற்ப இங்கிலாந்து வங்கி வெளியிடுகின்ற நாணயத்துக்கு எதிராக தங்க ஒதுக்கொன்று வைத்திருக்கப்படல் வேண்டுமென்பதோடு, வேண்டுகோளொன்று விடுக்கப்பட்ட உடன் நாணயத்தைத் தங்கமாகப் பரிவர்த்தனை செய்ய வேண்டியும் ஏற்பட்டது.

இங்கிலாந்து வங்கியினால் அதன் கடன் கொள்கையை வழிநடத்துவதற்கு வங்கி விகிதாசாரம் பிரயோகிக்கப்பட்டதன் மூலம் கண்காணிப்புக் கடமையில் வங்கிக்குப் பாரியதொரு பொறுப்பும் உரித்தாகியது. 1873 இல் ஏற்பட்ட நிதியியல் பிரச்சினை இங்கிலாந்து வங்கியினால் வெற்றிகரமாகத் தணிக்கப்பட்டதோடு, இதற்குச் சமமான விதத்தில் 1890 இல் வெளிநாட்டுப் பிணையங்கள் சந்தையில் அதிகூடிய ஊக வியாபாரத்தின் (Speculation) காரணமாக ஏற்பட்ட 'பெயாரின்' வங்கியின் முறிவடைதலுடன் தொடர்புடைய அவசர நிலைமையின் முன்னிலையில் இங்கிலாந்து வங்கி, மிகவும் வெற்றிகரமாக இந் நிலைமைகளையும் தணித்தது.

இவ்வாறு அவசர நிலைமைகளின்போது இங்கிலாந்து வங்கி வெற்றிகரமாக நிதியியல் பிரச்சினைகளை முகாமை செய்ததன் காரணத்தினாலும், மத்திய வங்கித் தொழிற்பாடுகளைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்தல் மற்றும் பேணி வருவதன் காரணத்தினாலும் பெரிய பிரித்தானியாவின் மத்திய வங்கியாக இங்கிலாந்து வங்கி படிப்படியாக மாறியதோடு, இது உலகின் ஏனைய நாடுகளில் மத்திய வங்கிகளை ஆரம்பிப்பதை ஊக்குவிக்கவும் செய்தது.

## ஏனைய மத்திய வங்கிகளின் ஆரம்பமும் அவற்றின் வளர்ச்சியும்

19 ஆம் நூற்றாண்டில் பெரும்பாலான நாடுகளில் அப்போதிருந்த வங்கியொன்றுக்கு அரசாங்கம் நாணயத்தை வெளியிடும் தனி உரிமையை ஒப்படைத்ததன் மூலம் அல்லது புதிதாக அவ்வாறான வங்கிகளை ஆரம்பித்ததன் மூலம் மத்திய வங்கிகள் உருவாகினவென்பதோடு, அவை அரச கட்டுப்பாட்டுக்கும் மேற்பார்வைக்கும் பல்வேறு மட்டங்களிலும் உள்ளாகின.

தனியார் வங்கியாக 1656 இல் நிறுவப்பட்ட 'சுவீடன் ரிஸ்க் வங்கி' இங்கிலாந்து வங்கியின் அபிவிருத்தியை உள்ளீர்த்து படிப்படியாக மத்திய வங்கியொன்றாக மீளமைக்கப்பட்டது. அதன் ஆரம்பகால அபிவிருத்திக் காலகட்டத்தில் நாணயத்தை வெளியிடும் ஏகபோக அதிகாரத்தை 1809 இல் ஆக்கப்பட்ட சட்டத்தின் மூலம் பெற்றிருந்ததோடு, 1830 ஆம் ஆண்டுகளின் பின்னர் நிறுவப்பட்ட வங்கிகளுக்கும் நாணயங்களை வெளியிடும் உரிமை கிடைத்தது. இந் நாணயங்களும் சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், 1897 இல் ஆக்கப்பட்ட சட்டமொன்றின் பின்னர் நாணயத்தை வெளியிடும் தனி உரிமை மீண்டும் 'ரிஸ்க்' வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது.

1800 இல் பகுதியளவு அரச நிதியங்களின் மூலமும் பிரதானமாக தனியார் மூலதனப் பங்களிப்பின் மூலமும் ஆரம்பிக்கப்பட்ட பிரெஞ்சு மத்திய வங்கி (The Bank of France) அதன் ஆரம்பத்திலிருந்தே அரசுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தது. இது அரச வங்கியாயிருந்ததோடு, நாணயத்தை வெளியிடும் தனி உரிமையையும் பெற்றுக்கொண்டது. ஆளுநர் மற்றும் உப ஆளுநர் இருவரை நியமிப்பதன் மூலம் அரசு இதன் நிருவாகத்துக்கு உரிமை கோரியதோடு ஏறத்தாழ 200 பங்குதாரர்களில் 15 பேர் நிருவாக சபைக்கு நியமிக்கப்பட்டனர். 1848 இல் நாணயத்தை வெளியிடும் அதிகாரம் பிரதேச ரீதியாகச் செயற்படுகின்ற பிரெஞ்சு மத்திய வங்கியின் 9 கிளை அலுவலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டதோடு, இதனூடாக அதன் மூலதனம் பாரிய அளவில் அதிகரித்தது. அதற்குப் பிற்பட்ட காலகட்டங்களில் பிரெஞ்சு பூராவும் இக்கிளை அலுவலகங்கள் அதிகரித்ததோடு, நாணயத்தை வெளியிடும் ஏகபோக அதிகாரம் பிரெஞ்சு மத்திய வங்கிக்குக் கிடைத்தது.

அம்ஸ்ரடேம் வங்கிக்கிருந்த நம்பகத்தன்மையை பல்வேறான காரணங்களினால் இழக்க வேண்டி நேரிட்டமையினால் நெதர்லாந்து மத்திய வங்கி (The Bank of Netherlands) 1814 இல் நிறுவப்பட்டது. மேற்கூறிய விதத்தில் இங்கிலாந்து, சுவீடன், பிரெஞ்சு ஆகிய நாடுகளின் முன்னேறிய மத்திய வங்கிச் சம்பிரதாயங்களுக்கு ஏற்ப நெதர்லாந்தும் அவ்வாறான வங்கியின் தேவையை உணர்ந்தது. அதன்படி அதுகூட நாணயங்களை வெளியிடுகின்ற தனி உரிமையையும் பெற்ற அரச வங்கியாகவும் மாறியது. நெதர்லாந்து வங்கி, தனியார் மூலதனத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அதன் முகாமைத்துவ சபையின் தலைவரும் செயலாளரும் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவதோடு, முகாமைத்துவச் சபையின் ஏனைய அங்கத்தவர்களும் பணிப்பாளர் சபையும் பங்குதாரர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அரசாங்கத்தின் கடதாசி நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியுற்றமை மற்றும் அதிகளவில் அவை வெளியிடப்பட்டமையின் பெறுபேறாக ஆஸ்திரியாவின் நிதியியல் நிலைமை துரிதமாக வீழ்ச்சியடைந்ததனை மீளச் சீராக்கும் நோக்குடன் ஆஸ்திரிய தேசிய வங்கி (The National Bank of Austria) 1817 இல் நிறுவப்பட்டது. இங்கு ஆஸ்திரிய தேசிய வங்கிக்கு நாணயத்தை வெளியிடும் தனி உரிமை கிடைத்ததோடு, பிரச்சினையான நிலைமை தீரும்வரை அரச கடதாசி நாணயங்களை அதன் நாணயங்களாக மாற்றுகின்ற அனுமதியும் கிடைத்தது. 1847 இன் இறுதிப் பகுதியாகின்றபோது, இச் செயற்பாடு பெரும்பாலும் முழுமையாகப் பூர்த்தியடைந்தபோதிலும், 1847 - 1866 காலகட்டத்தில் ஆஸ்திரிய யுத்தத்தில் தொடர்புற வேண்டி ஏற்பட்டதன் காரணமாக, மீண்டும் அரசாங்கம் கடதாசி நாணயத்தை வெளியிட்டதோடு, ஆஸ்திரிய தேசிய வங்கியினால் அரசாங்கத்துக்குக் கடன் தொகையும் வழங்கப்பட்டது. ஆஸ்திரிய தேசிய வங்கி 1878 இல் 'ஆஸ்திரிய - ஹங்கேரி வங்கி' (The Bank of Austria - Hungary) என மீளமைக்கப்பட்டதோடு, அதன் பின்னர் அரசாங்கத்தின் கடதாசி நாணயத்துக்குப் படிப்படியாக ஓய்வுவழங்கப்பட்டு நிதியியல் முறை பலம் வாய்ந்ததொரு அடிப்படையில் பேணிவரப்பட்டது.

1817 இல் நிறுவப்பட்ட நோர்வே வங்கி (The Bank of Norway) தனியார் மூலதனப் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், அதன் ஆளுநரும் உபஆளுநரும் நோர்வேயின் மன்னரால் நியமிக்கப்படுவார்கள் என்பதோடு, பணிப்பாளர் சபை அந் நாட்டின் சட்டவாக்க சபையினாலேயே நியமிக்கப் படுகின்றது. பிற்பட்ட காலங்களில் நாணயத்தை வெளியிடும் தனி உரிமையும், அரச வங்கியாளரின் பணியும் அதற்கு ஒப்படைக்கப்பட்டதோடு, சுவீடன் ரிஸ்க் வங்கியின் தொழிற்பாடுகளைப் பின்பற்றி மத்திய வங்கியின் நிலைமைக்கு வளர்ச்சி அடைந்தது.

இன்று டென்மார்க் தேசிய வங்கி (The National Bank of Denmark) என அழைக்கப்படுகின்ற கோபன்ஹேகன் தேசிய வங்கி (The National Bank of Copenhagen), தனியார் மூலதனப் பங்களிப்போடு 1813 இல் அரச வங்கியொன்றாக நிறுவப்பட்ட 'Rigs Bank' இன் தொழிற்பாடுகளைப் பொறுப்பேற்று நிறுவப்பட்டது. டென்மார்க் தேசிய வங்கிக்கு நாணயத்தை வெளியிடும் தனி உரிமை கிடைத்ததோடு, இது நிதியியல் முறையின் மத்திய நிலையமாகவும் மாறியது. முகாமையாளர்கள் நான்கு பேரில் இருவரை அரசாங்கம் நியமிப்பதன் ஊடாக அதன் நிருவாகத்தில் அரசாங்கம் தொடர்பு கொண்டபோதிலும், பணிப்பாளர் சபை பங்குதாரர்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப் படுகின்றது.

நாணயத்தை வெளியிடும் ஏகபோக உரிமையையும், அரச நிதியியல் முகவராண்மையின் பணியையும் பெற்றுக்கொண்டு, 1850 இல் பெல்ஜியம் தேசிய வங்கி (The National Bank of Belgium) நிறுவப்பட்டது. இதற்கு முன்னர் நான்கு வங்கிகளால் நாணயம் வெளியிடப்பட்டதோடு,

அவற்றில் ஒரு வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் தேசிய ரீதியில் சுற்றோட்டத்தில் கலக்கவில்லையென்பதுடன், அவை அனைத்துமே பயனுறுதியுள்ள விதத்தில் திறைசேரியின் முகவர் பணியை நிறைவேற்றவும் தவறிவிட்டன. பெல்ஜியம் தேசிய வங்கி தனியார் உரிமையின் கீழ் இருந்தபோதிலும், ஆளுநர் அரசாங்கத்தினாலேயே நியமிக்கப்படுகின்றார்.

ரஷ்ய பேரரசினுள் நிதியியல் சுற்றோட்டம் ஒன்றிணைக்கப்படும் நோக்கம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1860 இல் ரஷ்ய மத்திய வங்கி (The Bank of Russia) ஆரம்பிக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் ரஷ்யாவினுள் மத்திய வங்கி முறையொன்று இல்லாதிருந்ததனாலும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட கடதாசி நாணயங்களின் பெறுமதி துரிதமாக வீழ்ச்சியடைந்ததனாலும் பெரும் சீரழிவொன்று ஏற்பட்டது. ரஷ்ய வங்கிக்கு நாணயத்தை வெளியிடும் தனி உரிமை கிடைத்ததோடு, நாணய நிலைப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் குறுகியகாலக் கடன் வசதிகளை வழங்கி வர்த்தகம், கைத்தொழில், கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்கான பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. இங்கு ஆளுநரும் பிரதி ஆளுநரும் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவார்களென்பதோடு, திறைசேரி உத்தியோகத்தர்களைக் கொண்ட சபையொன்றின் மூலம் வங்கியின் தொழிற்பாடுகள் மேற்பார்வை செய்யப்படும்.

பிரதானமாகத் தனியார் பங்குதாரர்களின் மூலதனப் பங்களிப்பிலும் அதேபோன்று அரச மூலதனப் பங்களிப்பிலும் ஜர்மனி மத்திய வங்கி 1875 இல் நிறுவப்பட்டது. ஜர்மனியப் பேரரசு உருவாகிய காலகட்டத்தில் அதன் பிராந்தியங்களில் நாணயங்களை வெளியிடுகின்ற ஏறத்தாழ 33 வங்கிகள் இருந்தபோதிலும், ஜர்மனி வங்கி முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந்தது. எவ்வாறாயினும், அக்காலகட்டத்தில் இவ் அனைத்து பிராந்திய வங்கிகளுக்கும் ஒரு சில வரையறைகளின் கீழ் மற்றும் ஏகமனதான சட்டதிட்டங்களின் கீழ் நாணயங்களை வெளியிடுகின்ற அதிகாரம் இருக்க வேண்டுமென்ற இணக்கப்பாடு இருந்த போதிலும், நாணயங்களை வெளியிடுவதற்கான ஜர்மனியப் பேரரசின் அரச வங்கியாளராகச் செயலாற்றுகின்ற மத்திய வங்கியொன்றின் தேவைப்பாடும் மேலெழுந்தது. மேலும், இது இங்கிலாந்து மத்திய வங்கி செயலாற்றிய விதத்தைப் போன்று ஜர்மனியின் தங்க ஒதுக்கையும் அதேபோன்று கடன் கட்டமைப்பையும் பாதுகாப்பதற்காக வங்கி விகிதாசாரத்தைக் கொள்கையாகப் பிரயோகித்தல் வேண்டுமென்ற கருத்தும் எழுப்பப்பட்டது. ஜர்மனி வங்கிக்கு ஜர்மனி அரசு பங்கு மூலதனத்தை வழங்கியதோடு தனியார் துறையும் பங்கு மூலதனத்தின் மூலம் பங்களிப்புச் செய்தது. எவ்வாறாயினும், அதன் முகாமைத்துவச் சபையை நிறுவுகின்ற உரிமையை ஜர்மானியப் பேரரசு வைத்திருந்ததோடு, நிருவாகச் சபை அதன் பங்குதாரர்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாயிருந்தது.

தேசிய மட்டத்திலான ஒருசில வங்கிகளால் அதிகளவில் நாணயங்கள் வெளியிடப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட சிக்கலான நிலைமைகளைச் சீர்செய்யும் பொருட்டு ஜப்பான் மத்திய வங்கி (The Bank of Japan) 1882 இல் ஆரம்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட இவ்வங்கிகளுக்கு, அவர்களுடைய நாணயங்களைக் குறிப்பிட்டதொரு காலகட்டத்தினுள் நீக்கிக் கொள்ளும்படி அரசாங்கம் கட்டளையிட்டு, நாணயம் வெளியிடும் தனியுரிமையை ஜப்பான் வங்கியிடம் ஒப்படைத்தது. இது கூட்டுத்தொழில் முயற்சிக் கம்பனியொன்றாக ஆரம்பிக்கப்பட்டபோதிலும், ஆளுநர், பிரதி ஆளுநர் மற்றும் பணிப்பாளர்கள் நான்கு பேரைக் கொண்ட பணிப்பாளர் சபை ஆகியோர் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டனர்.

போர்த்துக்கல், ருமேனியா, பல்கேரியா, சர்பியா, துருக்கி, ஜாவா, எகிப்து, அல்ஜீரியா போன்ற நாடுகளின் மத்திய வங்கிகளும் நாணயம் வெளியிடும் ஏகபோக உரிமையைப் பெற்று, பத்தொன்பதாம் நூற்றாண்டினுள் படிப்படியாக வளர்ச்சியடைந்தன. இதற்கிணங்க, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியாகும்போது ஐரோப்பாவில் அனைத்து நாடுகளிலும் அதேபோன்று ஜப்பான், ஜாவா, எகிப்து மற்றும் ஆபிரிக்காவின் அனைத்து நாடுகளிலும் நாணயங்களை வெளியிடுகின்ற வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, அவற்றுக்கு விசேட சிறப்புரிமைகளும் அதேபோன்று அதிகாரங்களும் கிடைத்தன. இந்த அனைத்து வங்கிகளும் அந்நாடுகளின் அரசாங்கங்களது வங்கியாளராகவும் அரச நிதியியல் முகவராகவும் தொழிற்பட்டன. அத்துடன், அவை பல்வேறு அளவுகளில் ஏனைய மத்திய வங்கித் தொழிற்பாடுகளைப் புரிந்து இங்கிலாந்து மத்திய வங்கியைப் பின்பற்றி வளர்ச்சியடைந்ததோடு, அவற்றைத் தற்போதைய வரைவிலக்கணத்தின்படி மத்திய வங்கிகளென அழைக்கக்கூடியதாகவும் உள்ளது.

## புதிய மத்திய வங்கிகளை ஆரம்பித்தல்

இருபதாம் நூற்றாண்டு ஆரம்பமாகின்றபோதுகூட நவீன உலகத்தின் அனைத்து நாடுகளிலும் (இங்கு நவீன உலகமாக, ஆங்கிலேய வெள்ளைக்காரக் காலனிகளாக அழைக்கப்பட்ட வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகளும் ஏனைய காலனித்துவ நாடுகளுமே கருதப்படுகின்றன.) அதேபோன்று சீனா, இந்தியா போன்ற கிழக்குலக நாடுகளிலும் மத்திய வங்கிகள் இல்லாதிருந்ததோடு, அவற்றில் நாணயங்களை வெளியிடுகின்ற போது ஓரளவேனும் ஏகபோக அதிகாரத்தைக் கொண்ட வங்கிகளும் இருக்கவில்லை. ஐக்கிய அமெரிக்க தேசிய வங்கிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அனைத்து வங்கிகளுக்கும் மற்றும் ஒருசில அரச பிணையங்களின் பெறுமதிக்கும் ஏற்ப நாணயங்களை வெளியிடுகின்ற அதிகாரம் கிடைத்ததோடு, அந்த எந்தவொரு வங்கி நிறுவனமும் முழுமையாக ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் வங்கியாளரின் அரச நிதியியல் முகாமையாளரின் மற்றும் இறுதிக் கடன் வழங்குபவரின் பணியை நிறைவேற்றவில்லை. இதற்குச் சமனான நிலைமையொன்று தெற்கு மற்றும் மத்திய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, தெற்கு ஆபிரிக்கா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளிலும் நிலவியது.

1907 இல் ஏற்பட்ட நிதியியல் பிரச்சினையின் காரணமாக அமெரிக்க அரசாங்கத்தினால் அதுவரை நிலவிய பன்முகப்படுத்தப்பட்ட வங்கி முறையின் பலவீனங்களை இனங்காண்பதற்காக, அப்போது மத்திய வங்கிகள் நிறுவப்பட்டிருந்த பழைய நாடுகளின் வங்கிகள் மற்றும் நிதியியல் முறைமை தொடர்பாக ஆழமாக ஆராயும் பொருட்டு ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இவ் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு வங்கிக்கும் அதன் ஆளுகைப் பிரதேசத்தினுள் அதிகாரம் வாய்ந்த நேரொத்த 12 ஒதுக்கல் வங்கிகளுடன் கூடியதாக அமெரிக்க சமஷ்டி ஒதுக்கல் வங்கி 1914 இல் நிறுவப்பட்டது. இவ் வங்கிகளுக்கு ஆளுகைப் பிரதேசத்துக்கு நாணயங்களை வெளியிடுகின்ற துறைவாரியான ஏகபோக அதிகாரம், வங்கி ஒதுக்கல் நம்பிக்கைப் பொறுப்பாளர், அரசாங்கத்தின் அரச நிதியியல் முகவர், கழிவிடல் மற்றும் இறுதிக் கடன் வழங்குபவரின் கடமைப் பொறுப்பு ஆகிய அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இவ் வங்கிகளின் கடமைப் பொறுப்புகள் ஐரோப்பிய மத்திய வங்கித் தொழிற்பாடுகளிலிருந்து ஓரளவு வேறுபட்டிருந்தபோதிலும், அவற்றுக்கு நடைமுறை ரீதியிலான சம கடமைப் பொறுப்புகள் வழங்கப்பட்டன.

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியினால் பணிப்பாளர் சபைக் கூட்டமைப்பொன்று நியமிக்கப்படுவதன் மூலம் சமஷ்டி ஒதுக்கல் முறையில் அரச தலையீடு நடைபெறுகின்றது. அதேபோன்று ஒவ்வொரு சமஷ்டி வங்கியினதும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஒன்பது பேரில் தலைவர் உட்பட மூன்றுபேர் ஐக்கிய அமெரிக்காவின் சனாதிபதியினாலேயே நியமிக்கப்படுகின்றனர். ஏனைய ஆறு அங்கத்தவர்களும் குறிப்பிட்ட வங்கி ஆளுகைப் பிரதேசத்தின் கீழ் வருகின்ற அதன் அங்கத்துவ வர்த்தக வங்கிகளாலேயே நியமிக்கப்படுகின்றனர். அதன்

அங்கத்தவர்களில் மூன்றுபேர் வங்கிச் சமூகத்தைப் பிரதிநிதிப்படுத்துபவர்களாயுள்ளனரென்பதோடு, ஏனைய மூவரும் முறையே வர்த்தக, கைத்தொழில், கமத்தொழில் சமூகத்தைப் பிரதிநிதித்துபவப்படுத்துகின்றனர். மேலும், சட்டத்திற்கு ஏற்ப அங்கத்துவ வங்கிகள் சமஷ்டி ஒதுக்கல் வங்கியுடன், அவற்றின் வைப்புக்களுக்கு எதிராக குறைந்தபட்ச ஒதுக்கொன்றைப் பேணி வருதல் வேண்டும். ஐக்கிய அமெரிக்காவினுள், முன்னேறிய பழைய நாடுகளில் படிப்படியாக விரிவடைந்த வங்கி முறைக்கு நேரொத்த விதத்தில் மத்திய வங்கி முறை வளர்ச்சியடைந்தபோதிலும், சமஷ்டி ஒதுக்கல் வங்கி முறை அதன் விரிவான வங்கிக் கட்டமைப்பின் மீது ஆரம்பிக்கப் பட்டதாகும்.

மேலும், 1920 இல் பிரேசிலில் நடத்தப்பட்ட சர்வதேச நிதியியல் மாநாட்டில், அதுவரை மத்திய வங்கிகள் நிறுவப்படாதுள்ள நாடுகளில் கூடிய விரைவில் நிறுவப்பட வேண்டுமென்ற பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டது. மத்திய வங்கிகள் நிறுவப்படுதல் மூலம் ஏனைய நாடுகளின் நிதியியல் மற்றும் வங்கி முறை உறுதிப்பாட்டுக்கு மாத்திரமன்றி, அது சர்வதேச ஒத்துழைப்புக்கும் காரணமாயமையுமென்று இங்கு மேலும் வலியுறுத்தப்பட்டது.

1921 இல் தென்னாபிரிக்க ஒதுக்கல் வங்கி ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அப்போது சுதந்திரமான ஆயினும் மத்திய வங்கிகள் இல்லாதிருந்த நாடுகளில் மாத்திரமன்றி புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகளிலும் மத்திய வங்கிகள் நிறுவப்படுதல் அடுத்த அரை நூற்றாண்டினுள் நடைபெற்றது. அவ்வாறு நிறுவப்பட்ட மத்திய வங்கிகள் தொடர்பான பட்டியலொன்று பின்வருமாறு:

1921 - தென்னாபிரிக்கா ஒதுக்கல் வங்கி

1922 - பெருசியா ஒதுக்கல் வங்கி. 1931 இல் பெருசியா மத்திய வங்கியெனப் பெயரிடப்பட்டது.
- லட்பியா வங்கி
- லித்துவேனியா வங்கி

1923 - கொலொம்பியா குடியரசு வங்கி

1924 - ஹங்கேரியா தேசிய வங்கி
- போலந்து வங்கி
- பொதுநலவாய அவுஸ்திரேலிய வங்கியும் உருகுவே கூட்டாட்சி வங்கியும் மத்திய வங்கிகளாக மாற்றப்பட்டன.

1925 - அல்பேனியா தேசிய வங்கி

1926 - செக்கொஸ்லவாக்கியா தேசிய வங்கி
- சிலி மத்திய வங்கி
- கௌதமாலா மத்திய வங்கி (1946 இல் கௌதமாலா தேசிய வங்கியெனப் பெயரிடப்பட்டது.)

1927 - ஈக்குவதோர் மத்திய வங்கி
எஸ்தோனியா வங்கி மத்திய வங்கியாக மாற்றப்பட்டது.

1928 - சீனா மத்திய வங்கி
- ஈரான் தேசிய வங்கி
- பொலிவியா மத்திய வங்கி
- கிரீஸ் தேசிய வங்கி
- ஐஸ்லாந்து தேசிய வங்கி, மத்திய வங்கியாக மாற்றப்பட்டது.

1929 - யூகோஸ்லாவியா தேசிய வங்கி (முன்பு இருந்த சர்பியா தேசிய வங்கிக்குப் பதிலாக)

1931 - துருக்கிக் குடியரசு தேசிய வங்கி

1932 - மக்சிஸியா வங்கி, மத்திய வங்கியாக மாற்றப்பட்டது.

1934 - நியூஸிலாந்து ஒதுக்கல் வங்கி
- சல்வதோர் மத்திய வங்கி

1935 - கனடா மத்திய வங்கி
- இந்தியா ஒதுக்கல் வங்கி
- ஆர்ஜென்டீனா குடியரசு வங்கி

1936 - பராகுவே குடியரசு வங்கி (1944 இல் பராகுவே வங்கி எனப் பெயரிடப் பட்டது).

1937 - கொஸ்டாரிகா தேசிய வங்கி

1939 - ஆப்கானிஸ்தான் மத்திய வங்கி

1940 - வெனிசியூலா மத்திய வங்கி

1941 - நிகரகுவா தேசிய வங்கி - மத்திய வங்கியாக மாற்றப்பட்டது.

1942 - அயர்லாந்து மத்திய வங்கி
- தாய்லாந்து வங்கி
- இத்தியோப்பியா தேசிய வங்கி

1945 - போலந்து தேசிய வங்கி

1947 - டொமினிகன் குடியரசு தேசிய வங்கி

1948 - பாகிஸ்தான் அரச வங்கி
- ஜர்மனி பிராந்திய வங்கி, (மேற்கு ஜர்மனி ரெகிஸ்க் வங்கிக்குப்பதிலாக)
- பிலிப்பைன்ஸ் மத்திய வங்கி

1949 - ஈராக் தேசிய வங்கி

1950 - இலங்கை மத்திய வங்கி
- கியூபா தேசிய வங்கி
- கொரியா வங்கி
- கொஸ்டாரிகா மத்திய வங்கி (கொஸ்டாரிகா தேசிய வங்கிக்குப்பதிலாக)
- ஹொன்டுராஸ் மத்திய வங்கி
- ஜர்மனி வங்கி (German Bank of Issue அல்லது ஜர்மனி ரெஸிஸ்ட் வங்கிக்குப் பதிலாக)

1952 - பெல்ஜியம் கொங்கோ மத்திய வங்கி (1960 இல் நிறுவப்பட்ட நிதிச் சபை 1964 இல் கொங்கோ தேசிய வங்கி எனப் பெயரிட்டது.)

1953 - இந்தோனேசியா வங்கி (ஜாவா வங்கிக்குப்பதிலாக)

1954 - இஸ்ரேல் வங்கி

1955 - லிபியா தேசிய வங்கி (1963 லிபியா வங்கி எனப் பெயரிடப்பட்டது)

1956 - சிரியா மத்திய வங்கி
- ஈரான் மத்திய வங்கி (ஈரான் தேசிய வங்கிக்குப்பதிலாக)
- ரொடீசியா மற்றும் தாய்லாந்து வங்கி (ரொடீசியா ஒதுக்கல் வங்கி, சம்பியா வங்கி, மலாவி ஒதுக்கல் வங்கி என 1946 இல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.)
- நேபாளம் மத்திய வங்கி

1957 - ஜர்மனிய சமஷ்டி வங்கி
- கானா வங்கி
- சூரினாம் மத்திய வங்கி

1958 - நைஜீரியா மத்திய வங்கி
- மலாயா மத்திய வங்கி (1963 இல் மலேசியா மத்திய வங்கி எனப்பெயரிடப்பட்டது.)

1959 - மொரொக்கோ வங்கி
- அவுஸ்திரேலியா ஒதுக்கல் வங்கி (பொதுநலவாய வங்கி, பொதுநலவாய ஒதுக்கல் வங்கி மற்றும் பொதுநலவாய வங்கிக் கூட்டுத்தாபனம் எனப் பிரிக்கப்பட்டது.)
மத்திய ஆபிரிக்க நாடுகளின் மத்திய வங்கி அயன மண்டல ஆபிரிக்க மற்றும் கெமரூன் மத்திய வங்கி

1960 - கயானா குடியரசு வங்கி
- சூடான் வங்கி
- ஜமைக்கா வங்கி
- சோமாலியா தேசிய வங்கி பின்னர் மத்திய வங்கியாக மாற்றப்பட்டது

1960 - எகிப்து மத்திய வங்கி (எகிப்து தேசிய வங்கிக்குப்பதிலாக)
- நிகரகுவா மத்திய வங்கி (நிகரகுவா தேசிய வங்கிக்குப்பதிலாக)
- ஈரான் மத்திய வங்கி (ஈரான் தேசிய வங்கிக்குப்பதிலாக)
- ஐஸ்லாந்து மத்திய வங்கி (ஐஸ்லாந்து தேசிய வங்கிக்குப்பதிலாக)

1962 - அல்ஜீரியா மத்திய வங்கி (அல்ஜீரியா தேசிய வங்கிக்குப்பதிலாக)
- மாலே அரச வங்கி
- நெதர்லாந்து அன்றிலஸ் வங்கி

1964 - லெபனான் வங்கி
- ட்ரினிடாட் மற்றும் டுபகோ மத்திய வங்கி
- முருசி மத்திய வங்கி
- ருவண்டா தேசிய வங்கி

1965 - பிரேசில் மத்திய வங்கி
- கயானா வங்கி

1966 - கென்யா மத்திய வங்கி
- தன்சானியா வங்கி
- உகண்டா வங்கி

1967 - உருகுவே மத்திய வங்கி (உருகுவே அரச வங்கிக்குப்பதிலாக)

1968 - மோல்டா மத்திய வங்கி
- மாலே மத்திய வங்கி (மாலே அரச வங்கிக்குப்பதிலாக)
- குவைட் மத்திய வங்கி

1969 - அயன மண்டல கயானா அரச வங்கி

1971 - கம்பியா மத்திய வங்கி.

Printed by Atlanta Graphics, 62, 1st Floor, Super Market Complex, Borella.
Tel.: 2683750, 0777758764